


# உயரமற்றவர்களின் காலடி

# வரைபடமற்றவர்களின் காலடி

வேரும் வேரடி மண்ணுமான கவிதைகள்

முல்லை முஸ்ரிபா

## வரைபடமற்றவர்களின் காலடி

■**கவிதைகள் திரட்டு** ■**ஆசிரியர்:** முல்லை முஸ்ரிபா ■**விலாசம்:** தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு ■**©:** மஃரிபா மஃஸூர் ■**முதற் பதிப்பு:** டிசம்பர், 2020 ■**வெளியீடு:** வெள்ளாப்புவெளி, A6, 2/1, N.H.S கலைமகள் வீதி, கொழும்பு - 10, இலங்கை, 0112433224, 0775562475 ■**வெளியீட்டெண்:** 010, ■**பக்க வடிவமைப்பு:** எம்.ஏ.எம். அஸ்மி தொ.இல: 0757022680, ■**அட்டை வடிவமைப்பு:** எஸ்.நளீம் ■**அச்சுப் பதிப்பு:** எஸ் அன்ட் எஸ் பிரிண்டர்ஸ், கொழும்பு ■**பக்கங்கள்:** xii + 84, ■**ச.த.நூல். இல:** 978-955-0280-16-2

## Varaipadamattravarkalin Kaladi

■**Collection of Poems** ■**Author:** Mullai Musrifa, mullaimusrifa@gmai.com ■**Address:** Thanniroottu, Mulliyawalai, Mullaitivu ■**©:** Mahrifa Mahzoor ■**First Edition:** December, 2020 ■**Publication:** Wellappuweli, A6, 2/1, N.H.S Kalaimagal Street, Colombo - 10, Sri Lanka, 0112433224, 077 5562475, wellappuweli2009@gmail.com ■**Layout Designed:** M.A.M. Asmy, T.P: 0757022680 ■**Cover Designed:** S. Naleem ■**Printed By:** S & S Printing ■**Page:** xii + 84, ■**LKR:** 300/- ■**ISBN:** 978-955-0280-16-2

வடிவமற்ற ஒவ்வொன்றும் தனக்கான வடிவத்தை
தேடிக் கொண்டேயிருக்கும்



தனித்தலையும் சிறகுமற்ற பறவையின்
வரைபடங்கள் தொலைந்தன
எனினும்
காலடியில் புதைந்த கவிதையின் முளையில்
என் உயிர் துடிக்குமோசை
கேட்டிருப்பாய் காற்றே




உலகெங்கும் அலைந்துழலும்
வரைபடமற்றவர்களின் காலடியில்
கொடிபடர்ந்த சொற்கள் துளிர்த்துக்கொண்டிருக்கிறது
உணர்வுபூத்த வேரும் வேரடிமண்ணுமாக

அவற்றிற்கே

# புலரிச் சொற்கள்

***முல்லை*** முஸ்ரிபா மிக அற்புதமான சொற்சிப்பக் கவிஞர் இவரது கையுளி செதுக்கும் கவிச் சிற்பங்கள் மிக அருமையாக இருக்கின்றன. நேர்த்திமிக்க வரிகள் ஒவ்வொன்றும் நெஞ்சை அள்ளுகின்றன. வாசக மனதின் ஆழங்கள் வரை இறங்கி அழகாக வேர்கொள்கின்றன.

தொண்ணூறுகளுக்குப் பின் எழுந்த பொன்னெழுத்துக் கவிஞரான முஸ்ரிபாவின் வருகையோடு இடம்பெயர் ஈழத்து முஸ்லிம் இலக்கியம் முகவரி பெறுகிறது.

இவரது சொல்லாடல் அலாதியானது. யாருக்கும் இலகுவில் வசப்படாத ஒரு வசீகர சொற்றொகுதி இவருக்கே உரிய தனித்துவம். தமிழ் இலக்கிய உலகுக்கு செழுமை சேர்க்கிறது.

தேசம் சர்வதேசம் என இவரது கவிதா பார்வை நீள்கிறது. உலக மக்களின் உள் மனதை அழுத்தும் பெருவாழ்வை கிழிக்கும் பேரிடர் பொழுதுகளில் எல்லாம் தன்னை பிழிந்து கசியும் குருதியையும் கண்ணீரையும் கவிதையாய் செதுக்குகிறார்.

ஆழமான வரிகளால் அடிமனக் கதவுகளைத் தானாகத் தட்டித் திறந்து நுழைந்து ஆணியறைய ஒரு சில கவிஞர்களின் காந்த வரிகளால் மாத்திரமே முடியும். எல்லா நேரங்களிலும் கவிஞர் முஸ்ரிபாவுக்கு அது சாத்தியமாகிறது. தாய் மண்ணிலிருந்து ஈரம் சொட்டும் வேர்களோடு பிடுங்கி வீசப்பட்ட நேயமிக்க வாழ்வனுபவம் இவருக்கிருப்பது ஒரு காரணமாக இருக்கக் கூடும். சில கவிதைகளை வாசித்துச் செல்கையில் பலஸ்தீனக் கவிதை வரிகள் ஞாபகங்களில் பூக்கிறது.

முஸ்ரிபாவுக்கு வெள்ளைப் பூ மனசு. நல்ல மனிதாபிமானி அதனால் நல்ல கவிதாபிமானியாகவும் இருக்கிறார். இவர் தொகுத்து வழங்கும் முஸ்லிம் சேவையின் கவிதா சாளரம் இதற்கு சான்று.

ஈழத்து இலக்கியப் பரப்பில் ஆழ வேர் பரப்பும் அற்புதமான கவிதைகள் இந்த வரைபடமற்றவர்களின் காலடியில் நிறைந்து கிடக்கின்றன. இவரது கவிதைகள் மாற்று மொழியிலும் குறிப்பாக சிங்களத்திலும் மொழிமாற்றம் செய்யப்பட வேண்டியதும் காலத்தின் தேவையாகும். கவித்துவமிக்க தொகுதிகளை நாளைகளிலும் இலக்கிய உலகுக்கு இவரது விரல்கள் வரைந்தளிக்கப் பிரார்த்திப்போம்.

தொலைநோக்கோடு வடிவங்களைத் தேடி தொடர்ந்து பயணிக்கும் வெள்ளாப்பு வெளி சொற்சிற்பியை வாழ்த்துவதில் பேரானந்தம் கொள்கிறது. இது நமது பத்தாவது அறுவடை இது நாளைகளில் இன்னும் தொடரும்.

வெள்ளாப்பு வெளியின் முக்கிய செயற்பாட்டாளரான முல்லை முஸ்ரிபாவை பூம்பனிக்காலைக் குளிர் சொற்களால் வாழ்த்துகி றோம்.

**வெலிமடை ரபீக்** - வெள்ளாப்புவெளி
2020.டிசம்பர்.23

# வேரும் வேரடி மண்ணுமான கவிதை

***வேர்*** விடுதல் குறித்து நிச்சயமற்ற காலத்தில் வாழ்ந்திருத்தலென்பது வலி மிகுந்த உணர்வுகளால் இழைக்கப்படும் பொழுதுகளையே மீதப்படுத்துகிறது.

உலக வரைபடத்தில் வேரற்றும் விழுதற்றும் சாய்ந்து கொண்டிருக்கும் வாழ்வுடை மனிதர்களைக் காணுகிறோம். அவ்வண்ணம் காணுறு தருணத்தில் வேரற்ற நம்மீதே முதலில் வெறுமை படிகிறது. வெறுப்பு அடர்கிறது. மனசில் முள் இழைத்த கூரில் ரத்தமும் கசிகிறது.

அதனால்தான் கவிதையென்பது வெறுஞ்சொல்லால் அல்லாமல் கண்ணீரும் வேர்வையும் குருதியும் சீழும் சிலபோது நிணமுமாக அலையும் உணர்வுகளால் இழைக்கப்படுகிறது.

உலக வரைபடமெங்கும் இருப்பற்று அலைச்சலுறும் மானுடத்தின் காலடியில் துயர் கோடி கவிந்து கிடக்கிறது. அந்த துயரிடை தோய்ந்த மனசோடுதான் கொவிட்-19 க்குள் ஒடுங்கும் வாழ்தலின் அனுபவத்தை அபயமளிக்கப்பட்ட நான்கு சுவருக்குள் பெய்து வருகிறேன்.

இப்பனுவலில் சொல்லில் உறைந்து போதலுக்குப் பின்னராக எனக்குள் அவ்வப்போது நிகழ்ந்த இருப்பின் மீதான அனுபவக் கவிச்சியைத் திரட்சியாக்கியிருக்கிறேன்.

வேரும் வேரடி மண்ணுமாக வரைபமற்றவர்களின் காலடியில் துளிர்த்துக்கொண்டிருக்கும் சிறு நம்பிக்கை போல என்கவிதைகளும் மன அமைதி தேடி அரும்புகின்றன.

'ஏனெனில் அனைத்துமே மாறவும் சுவடு தெரியாமல் மறையவும் செய்கையில் அன்பு என்ற கதிரவனோ என்றென்றும் அசையாது நிற்கும்' ரஷ்யக்கவிஞன் சொன்னது போல அன்பு ஒன்றால் மானுடம் அமைதி பெறட்டும்.

தீரா அன்புடன்

முல்லை முஸ்ரிபா
2020.டிசம்பர்.21

**நன்றியின் தடம்**

பின் அட்டைக் குறிப்புக்காக கவிஞர் சோ.ப
தளக்கோள வடிவமைப்புக்காக எம்.ஏ.எம். அஸ்மி
அட்டை வடிவமைப்புக்காக கவிஞர் எஸ்.நளீம்
தட்டச்சுக்காக செல்வி எஸ்.எம். பாத்திமா ஷொஹாரா
பதிப்புரைக்காக கவிஞர் வெலிமடை ரபீக்

கவிதைகளின் தடத்துக்காக

எங்கள் தேசம், மீள்பார்வை, இஸ்லாமிய இலக்கிய மாநாட்டு சிறகப்பு மலர் (2016), ஜீவநதி, முஸ்லிம் சேவை கவிதா சாளரம், முகநூல் தளம் மற்றும்....

தங்களுக்கான நேரங்களைத் தந்துதவும் என் மனைவி, குழந்தைகளுக்கும்

கவிதையன்புகளுக்கும்

**வெளியீட்டின் தடம் வெள்ளாப்பு வெளிக்கும்**

*மீதமாயிருக்கும் நன்றி எப்போதும் போலவே என்னை வருந்தும் முட்களுக்கும் வருடும் பூக்களுக்கும் சொந்தமானது*

## வரைபடங்கள் அல்லது காலடிகள்

■வனச்சிறகு 1 / ■என்னுள் மீளச் செல்லுதல் 2 / ■எடுத்தெறியப்பட்ட உன்னை விட்டும் 3 / ■ஒரேயொரு மழை வெவ்வேறு நிறங்களில் பெய்கிறது 5 / ■காற்றுக்கு ஒரேயொரு கலர்தான் 7 / ■மந்திரச் சாலையில் முகங்குப்புறக் கிடத்தல் 9 / ■வித்தைக்காரன் சிறுமி கேட்ட பூவைக் கொடுக்கிறான் 11 / ■வீடு பெருத்தவன் பாடு 12 / ■வனச்சொல் 14 / ■நிறம் பற்றிய இரண்டு கவிதைகள் – வண்ணாத்திப் பூச்சிகளின் ஆவல் I 15 / வர்ணத்திலிருந்து வெளியேறும் குரூரம் II 17 / ■கொல்லப்பட்ட சொல்லின் சாம்பலில் துளிர்த்தல் 18 / ■தற்கொலை செய்து கொண்டிருக்கும் பொழுது 19 / ■முடக்கால் குத்தி நிமிரும் நம்பிக்கையும் இத்துப்போன காலமும் 21 / ■முள்ளும் பூவுமான பொழுது 23 / ■பூட்டிக்காகம் 24 / ■பெருங்கடல் பறவை பாடல் 26 / ■ஆதம்மலையில் உலாவும் கனா 27 / ■ஆளற்ற வெளியில் நிரம்பத்தவிக்கும் வளி 28 / ■அரியாத்தைகள் 29 / ■ஆயிரம் கடல் கொண்ட ஓடக்காரனின் பிரதி 30 / ■சொல்லின் அடர்த்தி; பச்சை இலைச்சாறு 32 / ■வனச்சிறகனைத்தின்றபேய்கள் 33 /

■பிலக்குடி **35** / ■பதாதைகளிலுறையும் மூச்சுக்காற்று **37** /■புலி மூஞ்சிக்குருவி **38** / ■என்னைப் பின்னிச் செல்லும் சிலந்தி **40** / ■வாசம் **42** / ■ஹினாவின் பாடல் : வானம் அவாவுறும் புறா **43** / ■சேயாவின் நிழற்படம் ஓர் ஊஞ்சல்பாட்டு **45** / ■அஸன்வளவில் வேர்மண்டிய ஈரக்காலடி **47** / ■நெஞ்சில் பெருகும் கனல் **49** / ■மனம் அறுவக்காடு **51** / ■மார்க்கபோலோவின் வரைபடம் சிதைந்தமை பற்றிய பிந்திய செய்திக்குறிப்பு **53** / ■நிசிகளின் நசிவு **55** / ■சொர்க்கத்துப்பறவையின் உயிரிலிருத்தல் **56** / ■பொன் அந்தித் தெருவும் நான்கு திசையும் **57** / ■நஃப் நதி அல்லது அரக்கான் **59** / ■புதிய அலுக்கோசு வருகை 1 **60** / ■புதிய அலுக்கோசு வருகை 2 **61** / ■உயிர்த்த ஞாயிறு மீது ஏவப்பட்ட பிசாசு **62** / ■வன்மம் **64** / ■இருளைப்பாய்ச்சுதல் **65** / ■கடுப்பு **66** / ■உள்ளொளியில் படரும் இருட்கறை **67** / ■நிலவும்ஒருசொல் **68** / ■ஒளிகொண்டவார்த்தை **69** / ■அரவங்கள் அடரும் காலம் **70** / ■ஏப்ரல் 21 **71** / தனியன் பட்ஷி **73** / ■ஒரு கடல் குறிப்பு **74** / ■8 நிமிடம் 42 செக்கன் கழுத்தை நெரித்துக் கொள்பவன் கறுப்பு வெள்ளை ரத்தம் **76** / ■லீலாவதி அல்லது லீலாரத்ன **78** / ■சோனியன் காலம் **79** / ■என் அறைச்சுவரெங்கும் படர்ந்த கொடி **80** / ■என் முதுகில் அவன் முயல்குட்டி **81** / ■ஒரு கோடிச் சொற்களின் சிறகு **84**

## வனச்சிறகு

வனமாகிக்கிடக்கின்றேன்
பெருங்காடு
கனவில் நுழைந்து
காயும் கனியும் இலையுமென உண்டு பெருக்கின்றன
வேர்வரைப்பரவி
சாறுறிஞ்சி பெருந்தாகம் தணிக்கவென
தனித்தலைந்த கணங்களில்
சொற்கள் பெருவனமாகி
திசை தெரியா விசையில் சிதறுண்டு சொரிகின்றன
காய்ந்து சருகாய்
தவித்தலைகிறது மீண்டும் காலம்

பொறுக்கிய சொற்களில்
புதிதாய் விருட்ஷம் செய்து வேர்நாட்டி
தனக்குள் கிளைகள் முளைத்தெழும்
பெயர் தெரியா மரங்களிடை பெருகிய
கருங்காலியாய் நிற்கிறேன்
நான்

வனமாகிக் கிடக்கும் பெருங் காடு நோக்கி
அக்னிக் குஞ்சொன்று சிறகு முளைக்கிறது

2014 ஜூன் 27

# என்னுள் மீளச் செல்லுதல்

காலெடுத்து வைக்கையில்
சடுதியாய் விரிகின்றன ஆயிரம் கதவுகள்
ஒவ்வொன்றும் வெவ்வேறு திசைகளில்
திருப்பங்காட்ட கால்களில் சிலிர்க்கிறது
ஒரு யுகத்தின் ஆச்சரியம் முழு மொத்தமாய்
ஏதாவதொன்றின் உள் நுழைந்து அதிர்கையில்
சொற்கள் பொலு பொலுத்து உதிர்கின்றன
உதிரும் பொலு பொலுத்த சொற்களை
அள்ளித்தின்று திமிறும் கணங்கள் பெருக்கின்றன
பெருகும் கணங்கள்
திசைகாட்டி கண்களை மயக்கின
இவ்வழி நடக்கலாமெனத் துணிகையில்
மீள வந்து விரிகிறது திரை
திரை விலக்கும் தீட்சண்யமுமற்றதாய்
கண்கள் கலங்குகையில்
கண்ணீர் ஆறெடுத்துச் சிவந்து
உயிர்கரைய நிற்கிறது
சடுதியாய் விரியும் ஆயிரம் கதவுகளும்
ஒரே கணப்பொழுதில் சடுதியாய் அறைந்து மூட
திசைகள் கரைந்து கனவுமட்டும் எஞ்சுகிறது
மனசின் அந்தரிப்புக் குறித்து
இந்த நூற்றாண்டு எதனை எழுதி முடிக்குமோ
மீளத் துயர்கவிய வீழ்கிறேன் நான்

2014 ஜுலை 27

## எடுத்தெறியப்பட்ட உன்னை விட்டும்

எடுத்தெறியப்பட்ட ஆதிக்கப்பரப்பில்
ஆணையிடுகிறாய்

நப்ஸுக்குள் புகுந்து கடித்துச் சிதைத்து
ரத்தம் சொட்டுகின்ற உன்
வாயிலிருந்து வடிகிறது
கரிகாலத்தின் துர்வாடை

நரம்புகளில் நீயுறைந்து
உணர்வுகளுள் பொங்கி
வீரியத்தவிப்பில் கிடக்கிறாய்
செத்துப் போன உணர்ச்சியின் மடியேறி

நீ
நெஞ்சாங்கூட்டை
கட்டிப்போடும் மாய வித்தைக்காரன்
உடற் கட்டையை
அலைக்கழிக்கும் மகா சலவைக்காரன்
நீ

கழுவித்தேய்த்து புத்தாடையாக்குவதாக
மயங்கியே மனுக்குலம்
கழிவில் அள்ளிப்பூசிப் பூரிப்பில் அலைகிறது

சுத்தத்தின் எதிர்க்கொடியில்
காயவிட்டிருக்கிறாய்
சலவையை நீ

அசுத்தம் வழிகிறது வாழ்வின்
எல்லாக் கணங்களிலும் தீயாகி
நீ
காற்றின் வெளிதனை வெற்றிடமாக்குவதில்லை
நிரப்பியபடி அலைகிறாய்
உன்னாலான இருப்பின் மீது
சிதைந்து போயிற்று எல்லாமும்

நான்
சிதையிலிருந்து எத்தணித்தெழுகிறேன்

இனி நப்சுகள் கூடி
எடுத்தெறியப்பட்ட உன்னை விட்டும்
விலகுவதாக
உன்னை விட்டும் விலகுவதாக
நிய்யத்து வைக்கிறது மனசில் உறுதி

2014 ஆகஸ்ட் 08

## ஒரேயொரு மழை வெவ்வேறு நிறங்களில் பெய்கிறது

ஒரேயொரு மழைதான்
வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நிறங்களில்
பெய்து கொண்டிருக்கிறது
திடீரென ஒரே இடத்தில் வெவ்வேறு பொழுதுகளில்
வெவ்வேறு நிறத்தில் பொழிகிறது பெருமழை
சிலபோது
வெவ்வேறு ஆட்கள் மீது
அல்லது ஒரேயொரு ஆள் மீது
பல்வேறு நிறங்களில் பரவுகிறது அதே மழை

அன்றும் பெய்யும் போது
கடைத்தெருவெங்கும் தீ மூட்டி எண்ணெய் வார்த்தது
அலைந்து திரிபவர்களின் ஜுப்பாக்களிலும் ஹிஜாப்களிலும்
மழைத்தீ சுட்டது
இது சிவந்த மழை
ரத்தம் சொட்டச் சொட்ட நனைதலே விதியெண்ணி
நாவிறைத்துப்போன சனங்கள்மேல்
மேலும் மழை
காவி நிறத்தில் பெருக்கிறது
பாவிமழை பரவி
பகல்களைக் கொன்று இரவுகளைத் தின்னுகிறது

படுக்கையை சுருட்டி தலையில் புதைத்தவாறு
மேலும் மேலும் அலைதல் தொடர்கின்றன
பர்தா போட்ட வீடுகளும்
தாடி நீண்ட கடைகளுமாக
மழை பற்றிய தலைப்புச் செய்திகளுடன்
புறப்படுகிறது பெரும் புயல்
அது மழையின் நிறங்களில் தீவிரமேற்றுகிறது
முன்னமிருந்த கோவில்களின் மணியோசையும்
இப்போதில் மசூதிகளின் பாங்கொலியும் அடங்கிட
இந்தக் கொடூரமென்ற கனமழை
இங்கில்லா வேறிடத்தில்
வெள்ளை நிறமெடுத்து மிக அமைதியாய்ப்பூக்கிறது
பன்சலைகளின் பிரித்தோதலும் அடங்காவெளி
நனைகிறது சாந்த மழையில்
மழையின் கொடுங்கோல் குறித்து
மரங்கள் திசைபரவிக் கொதித்தெழுகையில்

நேற்றுக் காவி நிறத்தில் பெய்து
எல்லாமுமாய் அழித்துவிட்டுப்போன அதே மழை
மெதுவாய் வெள்ளை நிறத்தில் வந்து
எரித்துவிட்டுப்போன சாம்பலையள்ளி
புனர்நிர்மாணம் புரிதல் கண்டு
பூரிக்கின்றன சில காளான்கள்

மழையின் நிறங்கள் பற்றி
இன்னும் அழுகிறது வானம்

2014 ஒக்டோபர் 20

## காற்றுக்கு ஒரேயொரு கலர்தான்

நிறமில்லை இனமில்லை
காற்றுக்கு வேறுபாடே கிடையாது
காற்றினதும் உயிர் மொழி சுதந்திரம் என்பதுதான்
எனினும்
இந்தக்காற்று வீசத் தொடங்குகையில்
வேறு வேறு மாயாஜாலம் காட்டி கூத்தாட்டம் புரிகிறது

காற்றுக்கு வெவ்வேறு வடிவங்களா
வாயடைத்து அழுதது வானம்

சற்றைக்குள் காற்று நீல நிறமானது
அது
கடல் குடித்த திமிரோடு
வானத்தை விழுங்கிய கெமையோடும் வீசியது

காற்று வீசவும் அதற்குச்சாமரை வீச எழுந்த
ஒரு நூறு மரங்கள்
காற்றிலிருந்து உதிரும் நீலத் தூசுகளை
அள்ளித்தின்று உடல்பெருகக்கத்தொடங்கின.

மீளவும் நீலாம்பரித்துக்கிடக்கும் உடல் மீது
நீலாம்பரி மகுடியெடுக்கிறது காற்று

காற்று நேற்று பச்சையாயிருந்தது
பச்சைக்காற்று வெறும் வெற்றுப்பேச்சுக்காற்றாய் வளர்ந்தது

அது படர்ந்த திசையில்
குளிர்மை கிடையாது குதூகலமும் குன்றியது
நம்பிக்கையிழந்து கிடக்கிறது தும்பிக்கையிழந்து

காற்றுச் சிலபோது
சிவப்பு மஞ்சள் மெரூன் காவி
அனறேல் வேறும் புது நிறமெடுத்து வீசலாம்
திசையும்மாறி

நான்
நிறக்காற்றுக்களால் உயிரடைத்துக் கிடக்கிறேன்
வெள்ளைக்காற்றை அவாவியபடி
மேலுந்திப் பறக்கிறது என்னுள்ளெழுந்த சிட்டுக்குருவி

2014 ஒக்டோபர் 25

## மந்திரச்சாலையில் முகங்குப்புறக் கிடத்தல்

முகங்குப்புறப்போட்டு யாருங்காண வொண்ணாதடி
கணங்களையும் தின்று திமிறும்
மந்திரக்காரனின் கைகளில் சாலையாய் நீள்கிறது என்காலம்
கனாப் பெருத்த காலத்தின்
ஆவல் பூசி விரியும் பொழுதொன்றையெனும் வழிப்படுத்தும்
எண்ணப்பெயல் கரைந்தொழுகிச் சாலை மீது பாய்கிறது

திசைகொள்ளும் எல்லாப் புறமிருந்தும்
மந்திரக்காரர்கள்
என் முதுகுக்குப் பின்னாலும் நெஞ்சுக்கு நேரேயும்
வலதும் இடதும்
நியதிகளை ஊதுகையில்
சாம்பிராணி வாசத்தில் மயங்கிக் கிடக்கின்றன
சாலை நெடுகிலும் முகங்கள் முகமற்று

எத்தணித்துக்கொண்டு திமிறியெழும்
மனசில் அனல்பட
யாரயினும் வருடலாமென கனா இயற்றுகையில்
முள்ளாய்க் குத்திக் கூரும் மந்திரக்கோல்கள்
எந்த மந்திரக்காரனது உணருமுன்பே
சாலைகள் நிறைகின்றன
பயணங்களின் பாதச் சுவடெம் தடந்தெரிய
என் ஒற்றைக் காலடி யாருமற்றுக் கரைகிறது.

இனி
முகங்குப்பறக் கிடத்தல் குறித்துச் சிந்திக்க வொண்ணாப்
பொழுதில்
மனிதரிடை முகங்கொடுத்தல் பற்றி
என் காலம் கரைந்த கவிதை அழுகிறது
இனி மந்திரக் கோல்களை கையிலெடு
நீ

2015 ஜனவரி 01

# வித்தைக்காரன் சிறுமி கேட்ட பூவைக் கொடுக்கிறான்

வர்ணத்தாள்களின் பூ ஆவல் பொங்கப் பூரித்தது

உயிருருகும் கணங்கள் சொட்டச்சொட்ட
ஒழுகும் தருணத்தில் கண் மலர்கிறாள்
சிறுமி
முன்னால் நிற்கின்றான்
வித்தைக்காரன்
கேட்கும் வர்ணத்தை வடிவழகுடன்
பூவாய்க் குவிக்கிறான் வாசம் அவனுக்குள் வருத்தியது
முகத்தில் பூவை வைக்கிறான்
மாத்திரைகளால் நிறைந்த அவளது படுக்கையை
இப்போது நிறைக்கிறது
வித்தைக்காரனின் சாகஸம்

அவள் மேலும் விண்ணப்பிக்கிறாள்
வெள்ளைப்பூவை வித்தையில் எடுக்க
மகிழ்ந்திற்று மூச்சுக்காற்றும் கூடி நின்ற
நிறை பொழுதும்
திருப்தியுடன் திரும்புகிறான்
அவன்
சிந்தையில் துடித்து
கணங்கள் சிறுகச் சிறுகி
வெள்ளைப்பூவாக உதிர்ந்து வீழ்கிறாள் சிறுமி
வித்தைக்காரனும் நானுமாகி

2015 பெப்ரவரி 04

## வீடு பெருத்தவன் பாடு

வீட்டைத்துறந்து திசையுமற்று நடக்கலானேன்
கால்கள் தங்கிய இடத்தில்
முகாம்கள் பெருத்தன தென்னங்குடல் பெருக்கி
ஊர் உறைந்தது
பதினாறடிதான் நீளம் பத்தடி அகலமென
குடிலில் ஒடுங்கிற்றுப் பெருந்தசாப்தம்
கேள்விக்குகுறியென தலை முறிந்து தொங்கிற்று
மிக இளமையும் ஊரிழந்த பெருந்தவிப்பும்
எதுவுமற்றதான காலத்தின் குந்தியிருப்பு அழுதிற்று
அடிமனசும் மண்ணற்ற நிலத்தின் நினைவும் கசங்கி

தசாப்தங்கள் கரைந்துருமாறிய போது
முகாம்கள் கரையத் தொடங்கின
பத்துப்பேச்சில் மெல்லக் காலூன்றித்
தலையெடுக்க எண்ணிற்று வாசம்
கொட்டிலாய் வீடுகள் முளைப்பெடுத்தன

தசாப்தங்கள் கடக்கையில்
கல்லில் வீடுகள் பெருகிப் பெருகின
குட்டிகளும் இட்டன இடைவெளி நிரம்பின
கணம்
நந்திக்கடலில் கரையொதிங்கிற்றுக் காலம்
வேர் பிடுங்கி நிலமொட்ட முனைதலில்
மேலும் குடும்பங்கள் சிதறின
அங்கொன்றும் இங்கொன்றுமாய் காலத்தினிடை
இடர்படு கோலம் மேலுமாயிற்று
அதனிடை புழுவென துடித்துற்று
வாழ்தல் எனும் பேறு மண் ஒட்டி

இங்கொரு இழப்பெனில் ஊர் திரண்டு வரலும்
அங்கொரு சிறப்பெனில் திருப்பி ஏகலும் என
அங்குமிங்குமாய் அங்கு என்பது இங்கு
இங்கென்பது அங்கு என எதிர்சுட்டியும்
ஒருபோது
அங்கொருகாலும் இங்கொருகாலுமென
அலைதல் இன்னும் உழல்தலாயிற்று
நந்திகடலின் கரையொதிங்கிய காலத்தினிடை
சிதறுதல் கூடிற்று
ஒரே குடைநிழலில் நின்றோங்கிய அற்றைவாழ்வு
முன் தசாப்தத்தின் முன்பே
முடிந்ததாயிற்று
நெஞ்சுகள் கனத்தன

கலாசாரம் பண்பாடு வாழ்தல் எனும் பொறிமுறை
பொறிக்குள் அகப்பட்டுப் பட்டுப்போனதாய்
துயரூறிற்று
தனித்தலையும் கணங்களில்
தலைமுறை இடைவெளியின் தருணங்கள் கனத்தன

இனியென்ன செய்தல் தகுமினி
நினைவுகளின் பெரு வெளியில்
நனைதல் தவிர்த்து
மனசுள் துடித்ததொரு நெடுங்காலமழை

2015 ஏப்ரல் 17

## வனச்சொல்

முதலில் அவர்கள் சொற்களைத் தீண்டினர்
வார்த்தையும் வெளிவர முடியா
வாய்குள் பொத்தித் தைக்க முயன்றனர்

நான்
எனது சொற்களை யாவரும்
அறியவொண்ணாதபடி ஒளித்தேன்
ஒளித்து வைத்த இடத்திலிருந்து
அரும்பத் தொடங்கின
நான் வியந்து போனேன்
எனக்குள் நம்பிக்கைகள் பெருகின

கடுங் காலடியோசையில்
எனது சொற்கள் வெதும்பத் தொடங்கின
எனது சொற்களின் உட்கதவுகள் அசைந்தன

உள்ளே நுழைந்தவர்கள்
எனது மெல்லிய கைகளைக் கைது செய்தனர்
எனது நீள் பார்வையைக் கொலை செய்தனர்
எனது காலடிச்சுவட்டையழித்தனர்
எனது மௌனத்தைக் குலைத்தனர்

எனது மனசுள் துடித்த சொற்கள்
வனமாகி வளர்ந்தன
வனமாகிப் பெருத்த சொல்
கடுங் குகைகளின் மூச்சையடக்கிற்று

2015 மே 05

## நிறம் பற்றிய இரண்டு கவிதைகள்

# வண்ணாத்திப் பூச்சிகளின் ஆவல் I

இலைகளும் உதிர்ந்து
கிளைகள் தனித்து நிறமற்ற வரள்மரமொன்றில்
வர்ணங்கள் பூசிய
வண்ணாத்திப்பூச்சிகளிலொன்றையாயினும்
பறக்கவிடும் ஆவல் பூத்தது
என மனசு

முட்களும் மிகுந்த மரத்தினது சிறு கிளைகளில்
எனது வண்ணாத்திப்பூச்சி பறந்தமரவும்
குத்துண்டு ரத்தம் ரணம் சொட்டியது
என் விரல்களில்
முடியவில்லை
ஒரு சிறு பூவையோ அன்றேல்
பூச்சியொன்றையோ பறக்கவிட
அன்றேல் எத்தணிக்க

முயன்றேன்
முயன்றெழுந்தேன்
ஆயிரம் பூக்களும் பூவொத்த பூச்சிகளுமாய்
புல்வர்ணப்பொழுதொன்றில் எழுந்தது
வர்ணங்களின் கலவைகள் என் விரல்களிலூறி
மரம் நிறையப் பூத்தது என் மனம்

பின்
வனமொன்று வளர்ந்து

மென் என் உணர்வுகளில்
வண்ண நிறத்துப் பூவிலொன்று
தூய வெண்மையாகுமாறு

நீ வண்ணாத்திப்பூச்சியாகி
வந்தமர்வாய்

2015 ஜூலை 2

## வர்ணத்திலிருந்து வெளியேறும் குரூரம் II

நிறக் குடுவைகளில் இரசங்களை நிரப்பியிருக்கிறது
காலம்
இரசங்களில் ஊழல் மோசடி ஏமாற்றுதல் அவமதிப்பு என
அவர்களுக்கேயுரிய லட்சணங்கள் பெருகின
ஆவல் பூக்கும் எதிர்காலமெனக் காத்திருந்த விழிகளில்
இரசக்குடுவைகள் ஒவ்வொன்றாய் கோலம் காட்டுகின்றன
கோலங்களில் அலங்கோலமாகும் வாழ்தலை
எண்ணி நொந்தன மாங்கனி மனசுகள்

திடீரென குடுவைகள் ஒவ்வொன்றாய் விழத்தொடங்கின
விழுந்துடைந்த நிறத்திலிருந்து வெளியேறும் குரூரம்
மாங்கனி மாதிரி வரைபடத்தின்
நஞ்சுறைந்தது
நீயாகி

2015 ஜுலை 02

## கொல்லப்பட்ட சொல்லின் சாம்பலில் துளிர்த்தல்

கொல்லப்பட்டிருக்கிறது
எனது மௌனத்தின் கடைசிவார்த்தை
எவரிடமும் பரிமாறிக்கொள்ளாமல்
அடிமனதில் கிடந்து துடித்து
எப்போதாவது வெளிப்பட்டு வெடித்தெழும் என்றொரு
எதிர்பார்ப்பில் எனக்குள் சேகரமான
அந்தவார்த்தையின் அர்த்தமும் பயனற்றுப் போயிற்று

அர்த்தமற்றுப்போன ஜிவிதம் பற்றி
பேசவொண்ணாப் பொழுதொன்றில்
அவர்கள் அந்த வார்தையைக் கொன்றனர்
நான்
உணர்வற்று உயிருமற்றுத் துடித்தேன்
கொல்லப்பட்ட வார்த்தை மீது
என்
இதயத்தை மூடி
இனிப் பிறிதொரு தருணத்தில்
புதிய வார்த்தையொன்றின் துளிர்வுக்காய்
இவர்கள் மூவரும் வளர்ந்திருப்பர்

கால்கள் இல்லை திசைகொண்டு நடப்பதற்கு
கைகளுமில்லை நம்பிக்கையுடன் வினைமுற்றி மீள்வதற்கு
முகத்தின் மீது ஒரு நூற்றாண்டின் தழும்பு
வழிகிறது

2015 ஒகஸ்ட் 06

## தற்கொலை செய்து கொண்டிருக்கும் பொழுது

மூன்று பிசாசுகளும் அங்கொன்று இங்கொன்றாய்
கடும் இருளில் பயமூட்டுகையில்
நினைவுகளை மீட்டு
பேசவொண்ணா பெரும் மௌனத்தில்
உறைந்து கிடக்கிறேன்
அரவமற்றதாய் நெஞ்சு துடிக்கும் கணங்களைப்
பொறுக்கி நெருப்பு வளையம் கோர்க்கின்றன
பிசாசுகள் மூன்றும் கொள்ளிவாலில்

ஆயிரத்தோராவது கையும் நீண்டு
சீழ் வடியும் காயத்தில் சீறுகையில்
சினம் கொண்டொரு பொழுது
மூர்க்கத்தில் நிரம்பி வழிகிறது

அலைந்தரற்றும் பிசாசுகளில்
முன்னையது முள்கொண்டு நிகழ்வுகளைக் கீறி
விசுறுகிறது ரத்தம்
அதில் பூத்தெழும் மற்றைய ரெண்டும்
கணங்கள் மீது துயர் அள்ளிப் பரவுகிறது

எல்லாமும் இழப்பதான பரிதவிப்பில்
துடித்தழுகையில் மூன்றாம் பிசாசு
உள்ளிருந்து ஏமாற்றத்துடன் வெளிப்படுகிறது

யாருமற்ற ஒரு பொழுதை அவாவி
அதன் மீது மிக மௌனத்தில்
ஒரு துயில் கணம் கனவு காண மனம் துடித்ததில் தப்பேது

இனிவரும் பொழுதும்
தற்கொலை செய்து கொண்டிருக்கிறது

2015 செப்டம்பர் 03

## முடக்கால் குத்தி நிமிரும் நம்பிக்கையும் இத்துப்போன காலமும்

இடர்புதர் நீவிக் காலூன்றுகிறேன்
ஆதிவேரோடிய நெஞ்சில் மீளத் துளிர்க்கிறது
நினைவொட்டிய பிஞ்சுமண் குருத்து
என் மகனினதும் மகளினதும் கைபிடித்து
நடந்தேகுகிறேன்

வாப்பாவின் வாப்பாவின் வயல்வெளியும் பூரிக்க
நீராவிப்பனிநீரில்
நீராடி
களிகொண்ட இளங்காலப் பொழுதும்
பொன்னிவண்டுச் சிலிர்ப்புமென
ஆதிவேரோடிய நெஞ்சில் மீளவும் துளிர்க்கிறது
நினைவொட்டிய பிஞ்சு மண் குருத்து

உம்மும்மா கிண்டிய ஈரப்பனம்பாத்தியை
குழந்தைகள் ஆச்சரித்துப் பார்த்திருக்க
நாவூறக் கிளறுகிறேன்
கிழங்குகள் கிளர்ந்ததில்லை
முகங்கறுக்க ஊமக்காய்ச்சியாய் கொட்டுண்டு கிடக்கிறது
காலம்
என் மகனினதும் மகளினதும் கை பிடித்து
நடந்தேகுகிறேன்

புத்தளத்து உப்பளத்துக் குடிலில் பெய்த அதே மழை
மீளக் குடியேறிய கொட்டிலில் வழிகிறது
கிணறு தோண்டுவதற்கும்
கக்கூசு குழி வெட்டுவதற்கும் மட்டுமென
தொப்பிபோட்ட என்ஜியோக்களும் அலைகிறது

ஒரு சட்டகத்துள் உள்ளுறைந்த கலாசாரத்தின் உயிர்த்துடிப்பு
கட்டுடைத்துக் கலர் கலராயும்
கலர் மங்கிக் காவியாயும்
மனசில் சிதழூறுகிறது நெடுந்துயர்

பன்னிரெண்டாயிரத்துச் சொச்சம் பெரும் பொழுதென
பெருகிய துயரிடை அந்தரித்துத் திரிகிறது
முள்ளாய் உறுத்தும் இருப்பு

ஏப்பமிட்டாயிற்று
என்மனமும் என்சுற்றமும் என் எல்லாமுமாக
ஏதிலியான நிலத்தில் முடக்கால் குத்தி நிமிர்கிறது
நம்பிக்கையொளிபூசி தூரத்தே மின்னுகிறதான
நாளை

2015 ஒக்டோபர் 26

## முள்ளும்பூவுமான பொழுது

கடிகார முட்களில் வடிகிறது பால் நிறப்பூ
பூமணத்தையள்ளிப் பருகி
சிறுவதனப் பூஞ்சிரிப்பில் களிப்புற்றுக்
கதிர்கிற கணத்தின் மீது
நிம்மதிக்கிறது காற்று
அது மென் மனசு

பின் கடிகார முட்களில் நிறைகிறது தீ நிறத்தில் முள்
முள் குத்திய நெஞ்சின் ரத்தத்தில் தோய்ந்து
மீளாப் பெருந்துயர் கொண்டலைந்திற்று
காற்று
மறு கணம் புயலாகிற்று வன் மனம்

கடிகார முட்களின் நகர்வுக்குள் நசிந்து போகிறது
ஒரேயொரு நாளும்
நாள் பற்றிய நினைவும்

2016 பெப்ரவரி 04

## பூட்டிக்காகம்

பூட்டி முத்தும்மா
வெள்ளை சீலையுடுத்து முக்காடிட்டிருந்தாள்
காலைப் பொழுதொன்றின்
வாசல் மர வாகையில் காகமும் வெள்ளையாயிருந்தது

பூட்டி விடியப்புறத்தை எழுப்பிவிட்டாள்
பஞ்சுப் பொன்விரல்கள் தடவ
நான் விழித்தெழுந்தேன்
வாப்பாவின் வயல் குருவிகளில்
பூட்டியோடு சேர்ந்த புளங்காகிப்பு

நம்பிக்கையோடு பூட்டியின் ஊன்றுகோல் தடத்தில்
நானும் நடந்தேகினேன்
உழைப்பின் வேர்வைத்துளிகள் வழிய
வயல்ப்புறத்து எருதுகள் முக்காரத்தோடு திரும்பின

அலையின் வெண்நுரைகள் பூரிக்க
கடல் பருகிய திமிரோடு
அப்பாவின் துடுப்பு கரைதட்டியது

பூட்டி நீராவி கடந்து கொட்டிப்பீலிக்கரையில்
கொட்டுண்டுகிடந்த
பனங்கொட்டைகள் பொறுக்கினாள்
பனம்பாத்தியின் மனமகிழ்வு
பொன்னியும்மாவும் உம்மம்மாவுமாய்

வாசல் மர வாகையில்
வெள்ளையாயிருந்து காகம் அழைத்தது
வாகை சூடிய மனசோடு
நான் வீரார்ந்த பொழுதுகள்
என் காலடியில் சருகுகளாய்க் கொட்டுண்டு போக

காகம் கறுப்பாயிற்று
என் மனசிலும்

வெள்ளைச்சீலை முக்காடிட்டு
வாசல் மர வாகையில் காத்திருக்கிறது பூட்டிக் காகம்
காகத்தின் சிறகில் படிந்த ரத்தத்துளி
இன்னும் காயவில்லை

2016 மார்ச் 22

## பெருங்கடல் பறவை பாடல்

அலைச்சிறகிலெழுகிறது பெருங்கடலின் பாடல்
திசைமுற்றும் விசைகொண்டலையும்
கொடும் பறவையின் சிறகு நுனியில் அசைவுற்று வீழ்கிறேன்
கோடி வட்சரம்
அட்சரங்களாய் மனசில் துளிர்க்கும்
வெண்ணுரையள்ளி வதனம் தழுவுகிறாய் நீ

அலைதழுவிய குருத்து மணலில்
சிறுகால் புதைய நினைவுதல் மீட்டிய
யாழின் சிறகுநுனியில் புதிய பாடலொன்றை எழுதிற்று
காற்று
காற்றள்ளிப்பூசிய தண்ணொளியில்
மேனி சிலிர்த்து ஓடமும் கால் கொண்டது

பெருங்கடல் பாடலில் இனி
ஆயிரம் பறவைகள் வானத்தை வரையலாம்
நீ
ஆயிரத்திலொரு பாடலை இசைத்த வண்ணம்
கடலின் காலடியில் துளிர்ப்பாய்
நான்
சிறகுநுனியாகி மறுகரையில் நிற்கிறேன்
வானம் முழுதும் பெருங்கடலின்
பறவைப்பாடல் பெய்கிறது

2016 ஜூன் 27

## ஆதம்மலையில் உலாவும் கனா

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் உனது கனவு சிறகற்றது
என்கிறாய் நீ
தனது கனவு நிச்சயமற்றது என்கிறான் அவன்
நிச்சயமற்றதும் சிறகற்றதுமான கனவுகளை
மலையடிவாரத்தில் தேடியலைகிறார்கள் அவர்கள்

எப்போதும் கண்டடைய முடியாக் கனவை கனவு கண்டு
தோற்றுப் போகிறார்களின் நிழலில்
ஆதியிலிருந்து ஆண்டாண்டாய்க் கண்ட கனவு பெருத்து
உச்சியிலிருந்து உருண்டு காலடியில் விழுந்து நசிகிறது

காற்றாயினும் ஒரு சொட்டு கீதத்தையாவது
இசைத்துவிட்டுப்போகாதாவென
நம்பிக்கையில் துடிக்கிறது மனசு

உனதும் அவனதும் கனவுகள் ஆதம்மலையின் மேலால்
மெல்லிய பனிக்காற்றில்
மிதந்துவருவதனை இன்னும் காண்கிறேன்
நான்

2016 ஜூன் 28

## ஆளற்ற வெளியில் நிரம்பத்தவிக்கும் வளி

தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்ள விரும்பிற்று
காற்று
மனிதமற்ற வெளியில் வாழ்தல் குறித்த அவாவில்
துடித்திற்று
தன்னைச்சுவாசிக்கும் மனிதனே
தன் மீது தூசுகளால் ஆராரித்தல் பற்றி
அவதியுற்றது
தான் நிரம்பி நிற்கும் ஒட்சிசன் வெளியில்
தனது சுவாசங்களால் நச்சு வெளிப்படும் உலகு குறித்து
எப்போதும் கவலையுறுகிறது காற்று
தம்மைச் சுற்றிய
காற்றையள்ளி சுத்தம் செய்தல் வேண்டுமென்ற
நினைப்பும் மறந்து போயினர் மனிதரென
காற்றுப் புலம்பிற்று
பின்
எலெக்ற்றோனிக் வலியில் துடித்துற்று
ஆளற்ற வெளியில் நிரம்பி நிற்றல் எண்ணி
தவிப்புற்றது

அதன் அர்த்தப்பாட்டின் அடர்த்தி குறித்து
சிந்திக்கா மனுக்குலத்தின மீது
சினமுற்றது
பூமி

2016 ஜூன் 29

## அரியாத்தைகள்

ரத்தம் சிந்திற்று
குருவிகளும் குரலொடிந்து செத்திற்று
காகமும் கரையா மெல்லிய இருள்
அதிகாலைப் பொழுதொன்றில் நிசப்தம் விரவிற்று
காடென அதிர்ந்து பெருகிற்று அனல் மனசு

அவள் குரல் மட்டும்
நிசப்தம் பரவிய வெளியை நிரப்பிற்று
நீல இருள் விலக்கி உள்நுழைந்தது வன் கொடுமை
ஒலியும் எதிரொலியுமாய் அவலத்தின் காற்று விம்மியது
ரத்தம் மறுபடி சிதறிற்று
அவளது ஒற்றைக் குரலும் செத்திற்று

அரியாத்தை
ஆனையடக்கிய வலியடர் நிலக்காட்சியில்
குருதியும் உறைந்திற்று

2016 ஜூலை 18

## ஆயிரம் கடல் கொண்ட ஓடக்காரனின் பிரதி

சமுத்திரம் பெரும் பிரதி
பல கடல்களினாலான பிரதி
கடல்கள் என்னைச் சுற்றி எழுகின்றன
ஆயிரம் கடல்களுக்குள்
ஓடக்கால் குத்தி நிமிர்ந்தெழ
மார்பு வரை உயர்ந்த நீர்கிழித்த விரைவு
நான் எனும் ஓடம்

ஓடத்தின் பிரதியை மெதுவாக வாசிக்கிறேன்
நான் நானாகி எனக்குள் இறங்கி
அதியகத்து நனவடியில் மெல்லமெல்ல மூழ்குதல்
திடீரென நானாகி மேலெழல்
லிபிடோ ஓடக்கால் குத்தி நிமிரும் முயல்வு

ஊடக்காரனின் பிரதி எனக்குள் பல்லாயிரம் கடல் உராய்வு

கடலின் ஒரு துளியெடுத்து நெஞ்சில் தடவியெழுதுகிறேன்

அலை எனும் பிரதியை வாசிக்கத் தொடங்குதல்
வாசிப்பு முடிவற்று நீள்கிற வாசிப்பு
ஓயாமல் பெருங்கொந்தளிப்பாய்
எனக்குள் அலைகிற ஆதி வாசிப்பு

அவள் அலையின் பிரதியை அழகென்று வாசிப்பாள்
அவன் அலையின் பிரதியை ஆபத்தென்று வாசிப்பான்
அவர் அலையின் பிரதியை அனுபவம் என்று வாசிப்பார்
அது அலையின் பிரதியை ஆச்சரியமென்று வாசித்தது

நான் அலையின் பிரதியை வாசிக்க வாசிக்க
முடிவற்று நீள்கிற பெரும் வாசிப்பு
ஆத்திரம் பொங்க அலையென்னை ஆழ்பரப்பில் வீசியது

அவர்கள் நீராலாகுதல்
வார்த்தைகள் சுழியிடத் தொடங்குதல்
நான்
அவர்களையும் வார்த்தைகளையும் வாசித்தலில்
மூச்சடைக்கிறது
வார்த்தை நீர்ச்சுழியில் மெள்ள மெள்ள அமிழ்தல்
ஆழ்பரப்பில் என்னை வார்த்தைகள் கொல்கின்றன

பிணமாகி கரையில் வீழ்கிறேன்
காகங்கள் கூடி ஒப்பாரித்திற்று
நான் எனும் பிரதியை மீள்வாசிக்கத் தொடங்கின
அது ஆதியிலிருந்தான வாசிப்பு

2016 ஆகஸ்ட் 09

## சொல்லின் அடர்த்தி ; பச்சை இலைச்சாறு

அந்த ஒரு சொல்லின் அர்த்தத்துக்கென முரணித்தனர்
அர்த்தம் தேடி ஆவணக்கட்டுகளில் ஊர்ந்தனர்
வீதியிலலைந்தனர்
புள்ளடியில்புணர்ந்தனர்
குரல்களை உயர்த்தியும்தாழ்த்தியும் சிலபோது
மௌனித்தும் போயினர்

அந்தச் சொல்லின் அர்த்தச்செறிவு
நெஞ்சுக்குள் சிதைந்திற்று

உறக்கம் கலைந்தனர்
வேலைத்தளத்தில் சண்டைகொண்டனர்
தேவைப்பட்டியலில் கூறுபட்டனர்
பெரிது சிறிதை விழுங்கிப் பெருத்தது

அந்தச் சொல்லின் அர்த்தச்செறிவை
அவைகளால் அறியவும் முடியாது
வாசித்துணரவும் கண்டடையவும் கேட்டுப்பெறவும்
முடியா அர்த்தமது

அந்தச்சொல்லின் அர்த்தத்தை
அனுபவிக்கவொண்ணாக்கொடுங்காலமொன்றில்

அது அவ்விடம் விட்டு நகரந்து
மரக்கொப்பில் சிறகொடிந்த சிறு குருவிக்கு
அணிலொன்று பச்சையிலையில் சாறெடுத்து
மருந்திட்டிருந்தது

2016 ஒக்போடபர் 10

## வனச்சிறகனைத் தின்ற பேய்கள்

என் இரு இறக்கைகளிலும்
ஆறுகளும் காடுகளும் நிரம்பித் ததும்பும் ஒரு காலம்
ஆற்றுப்படுக்கையெல்லாம் மண் பொங்கி நின்றது
தீரங்களில் வேம்பு தேக்கு முதுரை வீரை கருங்காலியென
விருட்ஷங்கள் நின்றுயர்ந்த வனங்களினூடாகப் பறந்தேன்
வனச்சிறகனாகி
மணலும் மரமுமாய் சிறகு கொண்டெழுந்த
என் பாலியமும் பாலியாற்றில் குதூகலித்தது

பின்னொரு காலம்
ஆயிரம் கைகளோடு கடும்பேய்கள் வெளிப்பட்டன
மணல் அகழ்ந்து தின்றன
மரங்கள் வெட்டி விழுங்கின
ஆறுகளை உறிஞ்சிப் பருகி வயிறு வளர்த்தன
வரண்டு வெடிப்புற்ற குளங்களிலெல்லாம்
வரால்களும் கொக்குகளும் உயிர் வற்றிப்போயின

நான்
ஆத்திரத்தில் அஸ்திரத்தை
பேய்கள் மீது ஏவினேன்
சப்பாத்துப் போட்ட பேய்களும்
'ரை' கட்டிய பிசாசுகளுமாய்
விதவிதமாய்ப் பெருகின

என் வனத்தின் சிறகுகளெறிந்தன

முது பேயாகி அலைகிறது
என் மனம் வனமெங்கும்

(வன்னி நிலப்பரப்பில் மண் அகழ்வு, மரம் அழிப்பு என்பன திருட்டுத்தனமாய் நிகழ்ந்து வருவது குறித்து எழுந்த கோபத்தின் வெளிப்பாடு)

2017 பெப்ரவரி 04

## பிலக்குடி

நிலம் மீதான அவாவின் வேர் நீண்ட காலடியாய்
பிலக்குடியெங்கும் உயிரோடித் திரிகிறது
நரம்புகளும் பொங்கி வழியும் துடிப்பில்
காத்துக் கிடத்தலென்பது இனிதாயிற்று

ஆச்சியும் அப்புவும்
வேர்க்கால் நட்டு வியர்வையூற்றி வளர்ந்த குடியில்
பேரனும் பேர்த்தியும் பேரவாக் கொண்டு
அகரம் விதைந்தெழு விருட்ஷமென வாழ்தல் வேண்டும்

ஆவலின் ஈர்ப்பில் நம்பிக்கைகள் தொலைய
தெருவில் கூடிற்றுக்குடி

மூத்த குடி காத்த மண்ணை மீளக்கொணர்தல் குறித்து
சிந்தித்தல் எங்ஙனம்
கண்ணீரால் நனைகிறது பிலக்குடி

நிலம் வாழும் உரித்து
உரித்தெடுக்கப்படுகையில் நிர்வாணமாகி
நிராயுதிகளாய் கூனுதல் குறித்து
சிலிர்த்து
அவர்களுக்குள் நிறக் கதைகள் ஆயிரம் நிகழ்ந்திற்று

இனி வீதியில் தம் நிறத்தின் குடிபெயர்க்க
புதுத்தெம்புடன் கிளர்ந்தனர்

கேட்பாரற்றுப் போதலில் கேட்ப்பாபிலவுக்கேவல்
திசையெட்டிக்கேட்க

பழையபடி
தேக்குமரத்துக் கிளையிலொரு காகம்
தாகத்தின் புதுக்காலையைக் கூவும்
நம்பிக்கையில் நிமிர்கின்றன
கடும் இரவுகள்

(முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிலக்குடி என்ற தமிழ் கிராமம் விடுவிக்கப்பட்டதன் நினைவாக எழுதப்பட்டது)

2017 மார்ச் 01

# பதாதைகளிலுறையும் மூச்சுக்காற்று

முகங்களின்னுமில்லை எங்கென்ற முகவரியில்லை
எப்போதென்ற முடிவில்லை

கறுத்த
சிறைக்கூடங்களின் கம்பிகளில் தொங்குகிற
இதயங்களில் கேட்கும் ஓலங்களில் சிறு நம்பிக்கையுமேது

வீதிதோறும் அலைகிறது
ஒவ்வொரு அம்மாவினதும்
ஒவ்வொரு அப்பாவினதும்
ஒவ்வொரு உறவினதும்
கண்ணீர் பட்டுத்தெறிக்கும்
ஒவ்வொரு பதாதையிலும் இழப்பின்
மீது படிந்துறையும் துயரிருப்பின்
பதைபதைப்பு

என் மனதின் பெருங்கொதிப்பெனினும்
ஓலச்சொற்களில் வழியும் கண்ணீர்
துடைப்பாரெவர்

சர்வமும் ஒடுங்கிற்று

பதாதை
பதாதையேந்திய கை
மாரடித்த வார்த்தை
காவல்குடில்
காத்திருப்பின் துயர் காலம்
தவிர
ஏது மீதமென்பாய்

2017 மார்ச் 22

## புலி மூஞ்சிக்குருவி

மெல்லிய நீல வர்ணச்சிறகு கொள்
ஆகாயம் தழுவும் தீரா ஆவல்
செம்பூக்களுதிரும் மரத்தண்டை
உச்சக்கிளையிருந்து அழகு வழிந்தொழுகும் கலவை நிறம்
உன் மனசில் அள்ளிப்பூசி வளர்த்தேன்
மென்சிறகும்வருட
எனக்குள் ஆச்சரியம் வியாபகம்

என் சிறகை வரைந்து தன் நீல வர்ணத்தைக்கரைத்து
வானத்து வெண்பரப்பில் உலாவியபடி
இரவு பலவும் நெடும் பகல்களும் கடந்து
சாமத்தில் சிலிர்த்திற்று
மழை வெயில் குளிர் கடந்து சிறகு மீக்கொள்

இதயத்தை தூக்கிச்சென்று உச்சக்கிளையிலிருத்தி
குதூகலித்திற்று
அருகமர்ந்த பறவைகளிடம் என் இதயத்தைக்காட்டிற்று
பூத்துச்சிவந்த பெயரறியாப் பூக்களில் வளர்த்தி
மென் தென்றலைத் தாலாட்டிச் சிலிர்த்திற்று

எனதின் குருவி வாழ்வு ரூபமானதல்ல

புலிமூஞ்சியோடு பறக்கத்தொடங்கிற்று
வானம் பெருத்து வனமானது
பெயர் தெரியாச் செம்பூக்கள் பெருந்தீ கொள்
பதினாறு இரவுகளும் பதினேழு பகல்களும்
மூர்க்கத்தோடுதுரத்தின
மழை காடாத்தியது
வெயில் வெடித்துச் சிதறிற்று
குளிர் பாறையானது
தொலைந்திற்று பறவையின் வனம்

காலமும் காலத்தின் கதியுமென
பயத்திலுறைந்த குருவி
புலி மூஞ்சியெடுத்து உறுமவும்
என் உருவும் அரூபமாயிற்று

2017 ஏப்ரல் 04

## என்னைப்பின்னிச் செல்லும் சிலந்தி

என்னைப்பின்ன முயல்கிறது
மீளமீளப்பின்ன முயல்கிறது சிலந்தி
அதன் கடும் உழைப்பு அடர்கிறது
எத்தனையாம் அடர்விது
எத்தனையாம் முயல்விது
சிலந்திக்கு நானொரு சவால்
என்னைப்பின்னி முடிப்பதற்கான
தன்நம்பிக்கை மின்னல் அதில் ஒளிர்கிறது
சிலந்தியின் வியர்வை வழிந்து என் இழைகளிலூறுகிறது
சிலந்தியின் சிலிர்ப்புறும் உற்சாகம்
என் பின்னல் முழுதும் படிகிறது
என்னை நான் கண்டடைதலென்பது
சிலந்தி தனக்கான பின்னலை
முழுமையுறுவதிலிருக்கிறது
சிலந்தி தன்னைக் கண்டடைதலென்பது
அது என்னை முழுமையுறுவதிலிருக்கிறது

நான்
சிலந்தியாகிறேன்
முயல்கிறேன்
தோற்கிறேன்
நம்பிக்கை வளர்க்கிறேன்
வியர்வையால் எழுகிறேன்
விடாமுயல்கிறேன்
மறுபடிமறுபடி முயல்கிறேன்
தோற்றுத்தோற்று
பின்
நான் வலையாகிறேன்
என்னைப்பின்னி முடித்திருத்திருக்கிறது
சிலந்தி

2017 ஜூன் 27

## வாசம்

மிக அமைதியோடு
மிகமிக மௌனமாக
காலம் கழிந்தாகி விட்டது
வெறுங்கனவுக்காரனென்ற வசவு தவிர்த்துக் கண்டதில்லை
ஆவல் பூரித்த
வாழ்க்கையையடுக்கியடுக்கிக் கட்டிய பளிங்கு மாளிகையில்
இப்போது
ஒளியில்லை சொல்லில்லை
சாளரம் திறபடவில்லை
கதவும் திறந்தாகவில்லை
ஒரு புன்னகை பூத்த பின்னேரம்
வாசலோரப்பூச்செடியில்
ரெண்டு குருவிகள் பாடின
ஒளி இருந்தது கதை இருந்தது
சாளரம் விரிந்தது கதவும் அகலத் திறந்தது

சோடிக்குருவிகள் எதனைப் பாடினவோ.

2017 ஓகஸ்ட் 09

## ஹினாவின் பாடல் :
## வானம் அவாவுறும் புறா

ஹினாவின் உயிரில் வடிகிற பாடல்
கணங்களின் நெடு அமைதியையும் துளைத்து
அத்தனை இதயங்களிலும் உள் நுழைந்திற்று
குருதியும் கண்ணீரும் விட்டு அவளிழந்த நிலம்
அவாவிக்கருக்கொண்ட பாடலது

நச்சு வாயு படர்ந்த காற்றின் காதுதீய
ஆயுதங்களிசைத்த துர்ப்பாடல் கடந்து வந்தவள்

ஹினா
இடிபாட்டிடை நசுங்கி
புரதான சுவர்களில் கிறுக்கல் சித்திரமான
சிரிய சிறார்களின் பலநூறு மூச்சை நிரப்பிய கேவல்

இன்றைய நாளில் உயிரீந்து கருகிய
127 குழந்தை ரத்தத்தில் தோய்ந்த காலத்துயர்

வெளித்திசை புகைமுட்டிய பொழுது தோறும் நிறங்கள்
வர்ணமிழந்த ஈரமண் பாடல் ஹினா

பூஞ்சிறகுகளும் விரியும் அவா அவள்

ஹினாவின் வானம்
பலகோடிப்புறாக்கள் வளர்த்துப்
பறந்தெழும் வாஞ்சை

சிதைந்த பூர்வீக வீதியில்
மீளத்திருநாட்களில் ஒளியேற்றும் ஆவல்

பிஞ்சுமண் குருத்துப்பாதம் கொடி படர்ந்து
ஆயிரம் வர்ணப்பூக்களில்
வேர் பூக்கும் நம்பிக்கைப் பாடல்

2018 பெப்ரவரி 04

## சேயாவின் நிழற்படம் ஓர் ஊஞ்சல்பாட்டு

பத்தாவது வயது ஊஞ்சல்பாட்டு
மெல்லொலியாய் குரலுமொடிந்து
திக்கெல்லாம் நிரம்பி வழிகிறது
நெஞ்சிலுமோங்கியறைந்து

நட்ஷத்திரங்கள் கொண்டாடிய வானம் சிறகெரிந்து
அனலில் கொதிக்கிறது
மென்தென்றலும்
புயலின் சுழியாகி சேதி சொல்லிற்று
பின் புலம்பிப் புழுங்கிற்று

வெள்ளாப்பைத் தினங்கூவிய காகக்கூட்டம் வெட்கித்து
திசை கரைந்து அழுதிற்றுப் பின்
காலையின் அசிங்கத்தில் துடித்திற்று
ஒளி முற்றத்தில் துள்ளி விளையாடிய முயல் குட்டிகள்
சோடி பிரிந்த துயரில் சோர்ந்தன

சேயா ஆடிய ஊஞ்சலில்
இப்போதும் ஒப்பாரி கேட்கிறது
பிஞ்சின் வதனத்தின் மீதெழுந்த புன்னகையைத்
தீய்த்தவன் வன்மம்
கருகிப்பற்றிற்றுப் பின்
என் சினத்தின் முன் வெட்கித் துவண்டது

சேயாவின் நிழற்படம் விழுந்த நிலத்தில்
இனிப் புல்லும் பூரிப்பதில்லை
சேயாவின் ஊஞ்சல் ஊமையாய் அலைகிறது

(சேயா பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட 10 வயது சிறுமி)

2018 மார்ச் 17

## அஸன்வளவில் வேர்மண்டிய ஈரக்காலடி

வளவுக்குள் வைத்த கடைசிக் காலடியை
எடுக்கமுடிவதில்லை
தவிப்புற்ற வறள்தாகக் கொதிப்பில்
தீய்ந்து போகிறதென் இதயம் மறுபடி கருகி

பனங்கிழங்கின் பிரிக்க மேலெழும் பீலியாய்
பிஞ்சுக்கால்கள் பரப்பி அடர்ந்தேறிய மகிழ்பொழுதுகள்
நினைவில் கிடந்து துடிப்பெடுகின்றன

வேர்மண்டிய காலடியின்
நரம்பிலேறிப் படர்கிறது உணர்வின் ரேகை
உம்மாவின் உம்மாவின் கனவில் நிமிர்ந்த
கருக்குப்பனை
தலைமுறிந்து தலைமுறை இடைவெளி பேசிற்று பின்
பேய்க்காற்றில் மௌனித்துப் போயிற்று

தொட்டச்சிணுங்கி முகிழ்ந்த
ஒற்றைழிப்பாட்டில் தொடரறுந்து நடக்கிறேன்
பேரற்ற எதுவோ அடர்ந்த அடித்தடத்தில்
பாம்புகள் பொங்கியெழுகின்றன

அஸன் வளவின் ஈஸான மூலையில்
நச்சு நிரம்பிய கள்ளிச்செடியொன்று
காலில் தைக்கிறது
என்
கழுத்தை நசிப்பதான இருபுற வேலிகள் நெருக்கின
எலும்புக்கூடும் சிதறிற்று
கலக்கத்தில்
காலடியையெடுத்து வெளியே எறிகிறேன்

வாப்பாவின் வாப்பாவின் வாப்பாவின் ஈரக்காலடி
உக்கிப்புதைந்த என் சுவட்டில்
முளைத்தெழுகிறது சின்னக்காலடிச்செடி மூன்று

2018 மார்ச் 22

## நெஞ்சில் பெருகும் கனல்

குரோதங்களில் திசையிடப்பட்டதான வாழ்வு
துயர் மேவிப் பரவுகிற பூமி
காற்றும் இறுகிய வன்மத்தின் கவிகை
உயிரீந்து போகிறது
மனிதமும் மனித நிறத்திலான அவலமும்

ஒவ்வொரு பத்தாவது நிமிடத்திலும்
நெஞ்சுக்குள் கனல் பெருக்கிறது
ஆதரவற்றுப் பிறக்கிற ஒரு மகவு
பூமித் துயர் மடியில் துடிக்கிறது
எந்தத் தேசத்தின் பெயர் சொல்லி
அழைத்து விடக் கூடும்

அநாதரவாய் நீளும் முகாரியில்
முகம் குப்பறக் கிடக்கிறது சடமாய் பூமி
எந்த தேசத்தின் பெயர் சொல்லி அழைப்பது
விரியும் வேள்விக்குள் வன்கரம் பற்றி
எவ்வாறு எழுதுவேன் நான்

கூடற்ற பறவையின் செட்டை களன்று
ரத்தமும் கசிகிறது
ஒவ்வோரு பத்தாவது நிமிடத்தின் மீதும்
என்னில் தெறிக்கிறது ரத்தம்

ஒன்பதாவது நிமிடம் நிறைகையில்
பயமேறித் துடிக்கிறது இதயம்
நிறமற்று நிற்றல்
திசையற்று அலைதல்
சிறகற்று வீழ்தல்
அறுநூறாவது வினாடியில்
என்னுள்ளே கிடந்து துடிக்கிறது
கழுத்தறுபட்ட பறவை

(ஒவ்வொரு பத்தாவது நிமிடத்திலும் உலகில் ஒரு குழந்தை அநாதரவாகப் பிறக்கிறது)

2018 ஜுலை 02

## மனம் அறுவக்காடு

பெருங்காடாகிப் போய்க்கிடக்கிறது
மனசு
கழிவகற்றி வாழும் ஒரு ஜீவிதப்பற்றில்
சுற்றுப்புறமெங்கும் அகமாக்கி உயிர்வாழ்தல் குறித்தே
ஆயிரத்தோராவது தடவையும் சிந்தித்து முடித்திருந்தேன்
யாரோ கொண்டு வந்து என்
சிந்தையில் கொட்டிவிட்டுப் போயினர்
அழுக்கேறித் துடிக்கிறது கணமும் கனத்தின் மீதான
கடுஞ்சினமும்

உள்வேரோடி ஒரு நுற்றாண்டு கழிவதற்குள்
பரம்பரை மீது படருறும் துயர் குறித்து
சிந்திக்கா சுயநலமிகள் வாழும் காலம்

குப்பை மீதே இனத்தின் அடையாளம் குறிக்கிறாய்
நீ
ஒரே அகப்பையால் அள்ளிப்பரிமாறும்
அன்பின் ஆழம் குறித்து நானும்
சிந்தை கொள்கிறேன்

நீ
குப்பைகளைக் கொட்ட
பெரும் காடாகிப் போகிறது மனசு

அறுவாக்காடு குப்பை மேடாகி
உணர்வுகளில் பொங்கி வெடிக்கிறது

எனதும் காலடி வேர் நீண்டு
அகதிக் கொட்டில்கள் முளைத்தொரு காலத்தின் சாட்சியாய்
நின்ற மண்மீது நீ கொட்டுகிறாய்
குப்பைத் தொட்டியல்ல என்னூர்
அறி

உணர்வுகளில் பொங்கி வெடிக்கிறது
மனம் அறுவாக்காடாகி

(புத்தளம் அறுவாக் காட்டில் கழிவுகளைக் கொட்டுவதற்கு புத்தளத்து மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமைக்கு ஆதரவாக எழுதப்பட்டது)

2018 ஓகஸ்ட் 05

## மார்க்கபோலோவின் வரைபடம் சிதைந்தமை பற்றிய பிந்திய செய்திக்குறிப்பு

மார்க்கோபோலோ
முன்னொரு தயணம் வந்தெங்கள் கரையில் கால் வைத்தனன்

திசை சுற்றிய கடலினுள்ளிருந்து மாங்கனி வடிவத்தில் வரைந்தனன்

அலைகழுவிய மாங்கனிப்படத்தில்
பன்னிறங்களில் கலாசாரம் மிளிர்ந்திற்று
மொழிகள்ரெண்டின் அழகுவளம் மிளிர்வு

ஒன்பான்திசை படர்ந்த இருப்பினது வரலாறு வரைபடமாயிற்று

மார்க்கோபோலோ இன்னோர் தயணம் வந்தெங்கள்
கோல்பேஸ் கரையில்
கால் வைத்தனன்

என்கனவும் பரவி
கடல் பாதி காணாது போனமை கண்டே கலங்கினன்
தன் பழைய ஓலைச்சுவடியை விரித்து
வரைபடம் தேடியேங்கினன்

என்கனவில்
கடலில் வளர்ந்ததொரு அரவம் விழுங்கிற்று

கடலைத்துளைத்து வளர்ந்த நிலத்தில்
சித்திர வடிவ அட்சரங்கள் முளைத்து நின்றன

பரபரப்போடு ஓடினன் மார்க்கோ
காலுக்குக்கீழே பட்டுபாதையொன்று வளர்ந்தாயிற்று
சமாந்தரமான நெட்டச்சாலையில் தாவியோடினன்
முனையம் மழுங்கிய வழித்தடத்திலோர் குதத்தில்
வீழ்ந்தும் போயினன்

எனது கனவு அலறிற்று
நான் கனவின் கடலில்
தூரெடுக்கத் தொடங்கவும்
என் முகத்தில்
இருபத்தோராம் நூற்றாண்டு
துளியாய் சிறுக்கத் தொடங்கிற்று

2018 செப்டம்பர் 11

## நிசிகளின் நசிவு

நிசிகளில் அலைகிற மௌனம்
சருகடர்ந்த தருக்களின் கீழ் ஒற்றைக்காலூன்றி
நிமிர்கிறது
ஒளி படரும் குருத்துப்பச்சை வண்ண இலையில்
மெல்லிய மனசைத்தடவி
ஓராயிரம் இலைகளிலும் நட்சத்திரங்களின்
நிறத்தைப்பூசிப்பூரிக்கிறது
நடுஜாமம்.
சொல்லி முடியாக் கதைகளில் அலையும் ஜாமமது
எழுதிமுடியாக் கவிதைகளில் படரும் ஜாமமது
பேசி முடியாப் பொழுதுகளிலும் அழியா ஜாமமது
மூவாயிரம் ஜாமத்திலும் ஒளிரா நட்சத்திரம்
ஒரேயொரு ஜாமத்தில்
குருத்துப்பச்சை இலைகளைத் துளிர்க்கிறது
மீதிக்காலத்தில் சருகள்ளியடர்கிறது
எங்கிருந்தோ வருமொரு சூறை
நிசிகளில் அலைகிற மௌனம்
உடைந்து சிதறுமெனில்
அதன் அர்த்தத்தைப்பெயர்த்தெழுத
இன்னுமாயிரம் ஜாமங்கள்
கவிதைக்குள் அலையும்

2018 ஒக்டோபர் 13

## சொர்க்கத்துப்பறவையின் உயிரிலிருத்தல்

நிய்யத்துகள் மீது படரும் கொடியாய் காரியங்களில்
விரிந்தடர்கிறது என் பெருமரத்துப் பறவை

ஒவ்வொரு சிறு கணமும் நிகழ்தலென்னில்
நேர்கோடாகவே சித்திக்கிறது
குறுக்குக்கோட்டு வழியில் மாயவர்ணங்கள் மிகு
கொடிகளுடன் லாவண்யம் காட்டும் முகங்களில் நானற்றேன்
என் பறவையும் கூடற்றது

வெள்ளை வதனத்தில் பூத்ததான மென்கொடிகள்
நேர்கோட்டில் கைலாகாய் அசைய
முட்புதர் விலக்கி நகர்கிறேன்
இதயத்தினடி வேரில் ஈரத்துடன் ஒட்டிக்கிடக்கும்
நம்பிக்கையின் துளிர்களில்
விரிகிற பெருவெளியில் உயிரீந்து கிடக்கிறேன்
நான் என் பறவையில்

காலமென்பது சொர்க்கத்தின் ஆவலின் பூரிப்பு என்கிறாய்
இங்கே இனிப் பறவைகளில்லை
நான்
சொர்க்கத்தின் பறவையுயிரில் ஒட்டிக்கிடக்கிறேன்

அர்ஸின் நிழலில் லாம்பு வண்ணத்தில் தொங்குகிற
கூட்டில்
நிம்மதியாய் உறங்குகிறது என் பறவை

2018 ஒக்டோபர் 15

## பொன் அந்தித்தெருவும் நான்கு திசையும்

சூரியன் மஞ்சள் வர்ணத்தைப் பூசி மெழுகிற்று
ஆசீர்வதிக்கப்பட்ட சொற்களால் நிரம்பியிருந்தது
பொன்அந்தித் தெரு
முகமன் செய்துகொள்ளும் ஒவ்வொரு கணமும்
நெஞ்சுக்குள்
ஈரம் சுரக்கும் ரத்த பந்தத்திலூறிய தெரு
முகங்களில் உண்மை பூத்திருக்கும்
கரங்களில் முயலுமை பூத்திருக்கும்
கால் தடங்களில் நூற்றாண்டுச்சேதி
வேர் கொண்டிருக்கும்
வியர்வைத்துளிகளால் பன்னீர் தெளித்த நேற்றையதெரு
மசூதியின் பாங்கொலி மஃரிபு வானத்தில் முழங்கும்
ஊற்றங்கரை பிள்ளையாரடி மணியோசை மனசிலூறும்
தேவாலயத்தின் திருப்பலி ஒப்புக்கொடுக்கும்போது
ஆமேன் ஒலிக்கும்
அரச மரத்தடிவிகாரைக்குள் பிரித்தோதல் தொடரும்
புன்முறுவலால் இருமருங்கும் பூத்திருந்த
நேற்றைத்தெருவில்
எல்லாமும் தொடர்பறுந்து போயிற்று
ரத்தத்துளிகளால் கண்ணீர் இறைத்தது இற்றைத்தெரு
ஆசீர்வதிக்கப்பட்ட சொற்களால் நிரம்பியிருந்த
பொன் அந்தித் தெரு
மனசுள் கருகிப்போயிற்று

2019 பெப்ரவரி 04

## நஃப் நதி அல்லது அரக்கான்

நடுநிசி ராத்திரியில் நஃப் நதி சிவக்கத் தொடங்கியது
புலர்வதற்குள்
உயிரற்ற உடற்பொதிகளை அலை கரையில் கொட்டிற்று
காக்ஸ் பஜாரின் கடல் கண்ணீராகி நின்றது

நஃப் வரலாற்றாறு
முன்னம் நூற்றாண்டுத்தொன்மையில்
உழவு ஆதிக்குடிகள்
கரையோரமேற்கில் வடக்கு ரக்கானில்
புத்திடாங்கில் மவுஸ்டாவில்
வேரிட்டபொழுதுகள்
ஒளிபூசி வரவேற்று பின் காலனியானது நீள்வரலாறு
இப்போதுகளில் அதிகாரத்தினடர்வு
ரோஹிங்கியா மீது கறையை அப்பிற்று
காவி அரக்கனின் கொடுங்கால்களில் நசிபட்டு
நசிபட்ட அரக்கானில் ரத்தத்திலொடிந்த மொழி
குரலுமற்று வேருமற்று பேருமற்று
கேட்பாரற்றுப்போயிற்று

நஃப்
சாவையும் வாழ்வையும் பிரித்த நீர்ப்பாலம்

தொங்கிற்று
நூற்றாண்டுத்தொன்மை
உயிரில் முள்ளாய்க்கீறி
புவன மனச்சாட்சியில்
எழுதிற்று துயர் கவிந்த பாடல்

நஃப் :- பர்மாவிற்கும் பங்களாதேஷுக்கும் இடையிலுள்ள ஆறு
காக்ஸ் :- பங்களாதேஷிலுள்ள கடற்கரை நகர்
வடக்கு ரக்கான், புத்திடாங்கில், மவுஸ்டா :- ரோஹிங்ய மக்களின் நெடுங்கால வாழ்விடம்

2019 பெப்ரவரி 10

## புதிய அலுக்கோசு வருகை

## 1

இற்றுப்போயிற்று வளையல் கயிறு
கழுத்தை நெரிக்கும் ஆயிரத்தோராவது ஆளும்
அற்றுப்போய் இற்றுப்போனது
பழைய வளையல்கயிறு

காலக்கட்டவிழ கயிறு நெகிழ்ந்திற்று
லட்சமயமான ஆட்களால் லட்சியங்கள் அழிந்திற்று

கயிற்றின்மேல்
முகமும் மூடி கழுத்தை நெரிக்கவொண்ணா காலம்
கறுத்துப்போயிற்று

புதிய அலுக்கோசு எழுந்தார்

நடுநிசிப்பொழுதொன்றில் இற்றுப்போய்க்கிடந்த
வளையல் கயிற்றின் மேல்
கரும் முகம் மூடிய தலைகள் வீழும்

அலுக்கோசு புனிதமாகிறார்

2019 மார்ச் 22

## 2

கறைகள் படிந்த வெளியில்
மூர்ச்சையான காற்றைப்பிடித்து
முகங்களில் அறையுமாறு பணித்திற்றொரு பெருந்தொனி

இருநூற்றிருபத்தைந்து கழுத்துக்களில் சுருக்கிட
மரணபீடமொன்று தோன்றிற்று
புள்ளடிகள் போட்டுப்போட்டு
தேய்ந்து போன விரல்களால்

புள்ளடிகள்
திசை பெருத்த அதிகார வெளியில்
மூர்ச்சையாகிப் போயின
மனமும் நெரிபட்டு
மனச்சாட்டிசியில் அழுதல் குறித்தும்
தேசத்தின் ஒழுங்குகள் அழிதல் குறித்தும்
கவலைகள் தொலைத்தனர் புள்ளடி வாங்கிகள்

மரணபீடத்தின் முள்ளாய்
பழைய கயிற்றில் தொங்கவிடப்பட்ட
இருநூற்றிருபத்தைந்து முடிச்சுகள்
வெறும் வார்த்தைகள்

புதிய அலுக்கொசு எழுந்தான்
மரணபீடம் அதிர்ந்தது
புள்ளடிகள் குவிந்த எலும்புக்கூட்டுக் குவியல்மேல்
விழுத்தப்பட்டன புனித ஆன்மாக்களின்
நிறைந்த ஆவல்

2019 ஏப்ரல் 05

## உயிர்த்த ஞாயிறு மீது ஏவப்பட்ட பிசாசு

உறைந்தே போயினேன்
கணங்களெனக்குள் அசையவுமில்லை
வெம்பித்தகிக்கும் நிலமென மனஞ்சுட்டு அலறினேன்
புனிதப்பாடு மிகுந்த ஆராதனையின் பரிசுத்தத்தில்
தேவாலயங்கள் நிரம்பியிருந்தகாலை உயிர்த்த ஞாயிறு மீது
ஏவிவிடப்பட்டன பேய்கள்

நான்
என்னைப்பிழியும் கேள்வித்தீயிலுருகிப் போகிறேன்

எனக்குள் எழுதிச்செல்கிறது
காற்றெழுந்தொரு துயர்ப்பாடலை

உயிர்த்த ஞாயிறு மீது ஏவிவிடப்பட்ட பேய்கள்
ரத்தம் பீறிட
பக்தியில் பூரித்த உயிர்களைத் தின்று களித்தன
பால்வற்றா பிஞ்சுகளை நசுக்கித் தின்றன
திருப்பலி ஈயவந்தோரை பலியெடுத்தன
இனத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் கூத்தில்
ஏவினர் எவரெவரோ பேய்களை

காற்றெறிந்து துயர்ப்பாடலையெனக்குள் எழுதிச்செல்கிறது
நான் வெட்கித்தலைகுனிந்து குறுகினேன்

புலம்பித்தவிப்புறும் உறவுகள் முன்
எந்த வார்த்தை கொண்டு ஆறுதலுரைக்க முடியுமென்னால்

மனிதம் வற்றிய தேசத்தின் வெப்பக்கனலெழுந்து
மீளப்பற்றியெரிகிறது
காலமும் காலநிமித்தமுமாய்
நான்
அழிந்துகொண்டிருக்கிறேன்

கரித்த ஞாயிற்றின் துயரத்தை
எத்தனை தலைமுறையெடுத்துத் துடைத்திடல் முடியும்
என்னால்

இயேசுவின் தியாகச்சுடரும் தணியாதது
ஈஸ்டர்மீது பிசாசுகள் துலாவிப் பருகின
உயிரும் உயிரடி உணர்வுமென

உயித்த ஞாயிற்றின் மேல் சாந்திமிக்க சொற்களொளிர
புனித நாளுக்காய்
காத்திருக்கிறது காலம்

வெள்ளையும் கறுப்புமாய்
என் மென் மனசைக் கொடியில்
கட்டியிருக்கிறேன்

இன்றைய நாளின் துயரை
காற்றிடம் சொல்லச்சொல்லி அழுகிறது
கொடி

(இந்நாளில் தேவாலயங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து எழுதப்பட்டது)

2019 ஏப்ரல் 21

## வன்மம்

உருகிய மெழுகாயன மனசு
காட்சிகள் விரியும் வன்மத்திரை
கொடிய முள்ளேறிய விழிகள்
விகாரித்துப்புடைத்த முகம்
வக்கிரம் பதிந்த காலடி
அழுகுரலுமொடிந்து வீழ்ந்த துடிப்பு
கண்ணீர் பெருக்கெடுத்த திசைகளில்
பெரு வரட்சி
ரத்தக்கறைகளின் உறைவு
காட்சிகள் விரியும் வன்மத்திரையில்
மீளத்தொற்றுமொரு நூற்றாண்டுத்துயர்
இறுகிய மெழுகாயான மனசு

2019 ஒக்டோபர் 21

## இருளைப்பாய்ச்சுதல்

வெள்ளொளியில் பிரகாசிக்குமோர்
அழகு வதனம்
நிழலென நெஞ்சுள் விதைகிற
உணர்வின் இழையறாக்கோலம்
பிரகாச ஒளி வெள்ளத்தில் இருள் பாய்ச்சி
வெளிச்சத்தில் படர்கிற கருங்கொடி
காட்சி மாறிகளிடை காணாமல் போகிற
உனக்கான பொழுதும்
எனக்கான பொழுதும்
கருங்கொடியில் துவல்கிறது
யாருமற்று சலனமற்றிருக்கும் காலத்தில்
இருட்கலவையில் நெளிகிறது
அரவமொன்று
அது நீயாயுமிருக்கலாமென நானும்
அது நானாகவுமிருக்கலாமென நீயும்
நினைந்திருத்தல் தவிர

நிழலாய் மீள்கிறது
உணர்வின் இழையறாக்கோலம்

2019 ஒக்டோபர் 27

## கருப்பு

வனாந்தரங்களின் அலைவில்
சுவடுகளும் கருக
ஏகாந்தித்தது கொடும் பொழுது
கண்ணீருக்குள்ளடக்க முடியாப் பேரதிர்வு
வானத்திலிருந்து நட்சத்திரங்களை உலுப்பிவிட்டு
வெண்ணிற யௌவன ஒளியில்
குளிர்ந்த சிலிர்ப்பும் வற்றிற்று
பெருங்கடல் நுரையென
பால்யம் பொங்கிய மகிழ்விச்சையும் கரைந்தழிந்திற்று
மண்ணின் நிறங்கொண்டு வரைந்தெடுத்த
ஈர ஓவியத்திலிந்து
இன்னுந்தீரவில்லை ரத்தநிறத்து வாடை
நெஞ்சுக்குள் பொத்தி வைத்த
நினைவுப்பஞ்சுப்பொதியில்
எஃகின் பாரம் சுமக்கவொண்ணாது
சிறகுமொடிய
வெங்கொதிப்பில்
நிழலுமற்று வீழ்ந்துயிர் துடிக்கிறேன்
மகா வனாந்தரங்களாய் அடர்கிறது
என்னுள்
நீ பீச்சிய எச்சில்

2019 நவம்பர் 10

## உள்ளொளியில் படரும் இருட்கறை

மிதந்து திரிகிறது உள்ளொளியாக ஒருணர்வு
இசைந்துருகும் மனசின் உள்ளடுக்குகளில்
பூசிய வெண்மை மீது படர்ந்தடர்கிற கணப்பொழுதின்
உள்ளொளிப்பிரகாசிப்பில்
ஆயிரத்தோராவது கசிவு
கசிந்துருகும் தருணங்களூடே மனசு நிறைந்து
பொங்குவதாக எண்ணமூட்டல்
நீ
நான்
நாம்
என
மிதந்து திரியும் உள்ளுணர்வில் படிகிறது
காலப்பெருந்துயர்
பீதி கவ்வியலையும் மனசுகளில்
ஒரு தனித்த பெருங்குரைப்பின் அகோரம்
இப்போதும்
மிதந்து திரிகிறது
இருட்கறை

2019 நவம்பர் 05

## நிலவும் ஒரு சொல்

நிலவும் ஒருசொல்
அதனை எடுத்து அமாவாசையில் வீசினேன்
பளீரென்று ஒரு பிரகாசம் கண்களுள் நுழைந்து
இதயத்தில் மலர்ந்தது
அந்தச்சொல்லை கூரை வீட்டின்
இத்துப்போன மோட்டில் செருகினேன்
குப்பி விளக்கில் குதூகலம் அதுவானது
அந்தச்சொல்லை நெடுந்தெருவில்
உருட்டி விடுகிறேன்
திசைகளெங்கும் புலர்ந்திற்று மகா ஒளி
அதே சொல்லை
வளைந்தமுதுகின்
வியர்வைத்துளியில் ஒட்டிவைத்தேன்
மனசுக்குள் ஒரு முத்தின் குளிர்ச்சி
நிலவும் ஒரு சொல்தான்
அதனை கர்வம் கொள்
மனசுகளில்
நெருப்புக்கொள்ளியாய் சொருகிக்கொண்டேன்
கர்வம் கரைந்துருகுல் கண்டுருகிற்று ஒளி
நிலவெடுத்து
கண்களில் ஒற்றிக்கொண்டேன்
இரவுகள் எனக்குள் தொலைந்தன
நிலவும் ஒரு சொல்
எல்லோரதும் குதூகலம்

2020 ஜனவரி 01

## ஒளிகொண்ட வார்த்தை

நுரைத்து நுரைத்து பால் பொங்குதல் போலொரு
வார்த்தை
ஏழ்கடலும் பிழிந்தெடுத்த ஒரு துளி அடர்த்தியென
அத்தனை குளிர்ச்சியெனக்குள்
மேகங்களைப் பற்றிக்கொண்டு மேலெழுந்து மிதந்தேன்
ஆயிரம் மின்னல்களால் ஒளிர்ந்திற்று
மா கடல்
வானவில்லெடுத்து கிறுக்கல் ஓவியம் தீட்டினேன்
பூமியின் மேனியில் அழகின்ரேகை
நட்சத்திரங்களை உலுப்பினேன்
பொலுபொலுக்கத்தொடங்கிய
ஒளி வெள்ளத்தில் மின்மினிப்பூச்சிகளிலொன்று உன்
வதனத்திலமர்ந்தது
அதனிடமும் கற்றிருக்கலாம்
அந்தவொரு வார்த்தை
கொஞ்சம் முந்தித்தான் வண்ணத்துப்பூச்சிகள்
அவ்வழியால் பறந்திருக்க வேண்டும்
நினைதலை மீட்டிடும் சிறகுகளில் வழிகிறது
வர்ணங்களின் களிம்பு
ஒரேயொரு வார்த்தை
பால் பொங்குதல் போலொரு உணர்வு

2020 ஜனவரி 10

## அரவங்கள் அடரும் காலம்

எங்கும் நிரம்பி வழிகிறது நஞ்சுச்சொல்
நரம்புகளிலூறிப் பீறிடுகையில்
தூய வெளியில் நஞ்சேறி நம்பிக்கை மூர்ச்சையாகிறது
ஆதியிலிருந்து காத்த மௌனத்தின் மீது
அறைகின்றன ஆயிரம் காவிக் கரங்கள்
அவற்றின் ரேகைகளாய் எப்போதும்
ஊர்ந்து கொண்டிருக்கிறது
உன் சந்ததி மீது படர்ந்தெழும் சர்ப்பம்
நீசினமடக்கு
உன் பொறுத்திருத்தல் மீது இப்போது
பெருங்கூத்து நிகழ்த்தப்படுகிறது
மூன்று பெரும் பேய்களும் சில பிசாசுக்குட்டிகளும்
பாத்திரமேற்றுன் முகத்தின் மீது கீறல்கள்
அகமுடைந்து போயிருப்பாய்
உள்ளெழுந்து மனங்கரைந்து துயரிருப்பாய்
உன் ஆதிவேரின் மீது உள்நுழைகிறது
ஆதிக்கத்தின் கொடூரம் எல்லை மீறி

இனிவரும் மூன்றாம் சந்ததியும் சாந்தியற்றுப் போதல் குறித்த
பீதியுடனும் அவ நம்பிக்கையுடனும்

நச்சுச்சொற்காரரின் இதயத்திலிருந்து ஓர் ஓவியம்
கலன்று வீழ்கிறது
நீ
பிரேம் போட்டு தொங்க வைப்பாயா

2019 நவம்பர் 10

## ஏப்ரல் 21

கருத்த இளங்காலைமீது உயிர்த்த ஞாயிறு
குருதியில் தோய்ந்து அலறிற்று
தேவாலயத்தின் வெண் சுவர்களில் உறைந்த
ரத்தமும் சதையும் போல எனது பிரதிக்குள்
பாதி கருகிய சொற்கள் உயிர் துடிக்க
வெட்கித்துக் கிடந்தன துர்க்கனவொன்றின் சலனப்படமென

நிகழ்ந்திருக்க்கூடாது
பெருஞ்சாத்தானாலே ஏவி விடப்பட்ட சூழ்ச்சி
வரலாற்றுக்கறையையென் கல்பிலள்ளிப் பூசிற்று
நூற்றாண்டு கடந்தும் அழியாப் பெருங்கறை
திருப்பலியின் புனிதத்தில் கண்ணீருமடர்ந்து பொருமிற்று
எனது முறையால் நான் கெஞ்சியழுகிறேன்
மசூதியில் துஆவும் நீண்டது
கோவில்களிலும் விகாரைகளிலும் தூயமணியொலி
சாந்தி வேண்டிற்று
தேவாலயத்தின் பிரார்த்தனைகள் கூடிற்று

‘எங்களுக்கு குற்றமிழைத்தோரை
நாங்கள் மன்னித்தது போல
பரிசுத்த பிதாவின் பெயர்கொண்டு
ஆமேன் என்றனர்’

பேராயரின் ஈரச்சொற்களில் பேரன்பு
ஆலயமெங்கும் பூத்து
உயிரீந்தோர் மீது ஆசீர்வாதம் நிலைப்பதாக

சிலுவைப்பாரம் சுமப்பவர்களே
பாவக்கறை கழுவியோரே
உங்கள் விசுவாசத்தின் மேல்
பரிசுத்த ஆவி படர்வதாக

ஈஸா நபியும் வந்திறங்குவார்
நம்புகிறோம்
பெருஞ்சாத்தானின் கொடுங்கோன்மை அழியுமென

2020 ஏப்ரல் 21

## தனியன் பட்ஷி

தனிமை
அடர்காடு ஆளரவமற்றபுதர்வெளி
என்னைச்சுற்றி வளர்கிறது மகா காடு
காட்டினுள் சூழ் மரங்களை வாசிக்கிறேன்
இலைகள் தாள்களாயின
தருக்கள் பனுவல்களாயின
அடுக்கப்பட்ட அலுமாரி காடு
ஒவ்வொரு மரமாக எடுக்கிறேன்
கிளைகளைப் புரட்டுகிறேன்
இலைகளின் வாக்கியங்களில்
வாசிக்கத் தொடங்குகிறேன்
வாசிப்பு என்னைச்செதுக்கிற்று
அடர்வனத்தின் மத்தியில் நான்
தனியனாயினேன்
எனக்குச் சிறகுகள் முளைக்கின்றன
வாசிப்பின் பசி
பட்ஷியனாய் அலுமாரிக் காட்டுக்குள் அலைகிறேன்
வனங்கள் தாவிக்கடந்து
புதிது புதிதாய் மரங்களில் நுழைகிறேன்
அவற்றுள் எண்ணற்ற வாயில்கள் விரிகின்றன
ஒன்றில் நுழைந்து இன்னொன்றில் ஒளி பருகினேன்
எனது தாகிப்புத்தீராமல்
தனித்திருப்பின் எல்லை நீண்டு பாய்கிறது

வனங்கள் நிறைய
முடிவுறா மறு வாசிப்பு நீள்கிறது

2020 மே 15

## ஒரு கடல் குறிப்பு

விரிந்த கடல்
ஞாபகங்களாகித்தெறிக்கிறது
என்னில்
நான்
ஒற்றைப்படகின் துடுப்புக்காரன்
வலிக்க வலிக்க என் ஒற்றைப்படகு
திசை காணா அலைவு
மீளமீளவென வழிக்கிறேன்
பால்யத்தில் பிஞ்செனப்பாதம் தொட்ட
கரையைக்கழுவி
அலையின் மொழியில் எழுதிய
அழகுக் கவிதைகள் ரெண்டும்
மென் சாகரத்தில் மீன் குஞ்செனெ
துள்ளலழகு
என் பஞ்சு மனசுதடவிய
கவிதைகளின்
வேர்வையும் ரத்தமும்
இன்னுமெனக்குள்
உணர்விலூறி உயிர்க்கிறது

ஞாபகங்களில் தெறிக்கிறது என்னில்
விரிந்த கடல்

யௌவனத்தின் ஆணலையில்
பின்னிய துடிப்புக்கவிதையொன்றில்
பாவுருகிப்பெருங்கடல் பொங்கிற்று
அந்த ஒற்றைக்கவிதை என்னிலாகி
ஓயா அலையில் வளரவும்
மூன்றின் திசைகளிலும் அலைகிறதென்
ஒற்றைப்படகு

கரையில் நுரைத்த அலையின்
மொழியில் பெயர்த்தெழுதிய
வட்சரப்பாக்களின்
நரம்பிலூறி விரிகடலில் உழல்கிறேன்
நான்

கடலின் மறுகரையில்
கனி விருட்ஷமொன்றில்
படிகிறது பெருங்கடலின் உள்ளொளி

2020 ஜூன் 27

## 8 நிமிடம் 42 செக்கன்
## கழுத்தை நெரித்துக்கொள்பவன்
## கறுப்பு வெள்ளை ரத்தம்

சூரியனே கண்களை இறுகப்பொத்து
பகல்களெரிந்து கருக
பூரண சந்திரனே நீ முகம் முழுசாய் மூடு
இருளடர்ந்து பெருக

பறவைகளே அத்திசைகளில் பறக்கவுமொண்ணா இனி
மெல்லிய தென்றலையும் தின்றிருக்கிறது நிறப்பேய்

வல்லரசின் தெருக்களில்
வல்லூறுகளின் பல்லாயிரம் கால் நக நாகங்களிடை
கறுப்பு வெள்ளை ரத்தத்தில் வழிகிறது
ஒரு நூற்றாண்டின் அதிகாரம் மொத்தமும் கரைந்துருகி
கழுத்திறுகிச் சாகிறது சனநாயகம்

8.41 நிமிடங்களில் கழுத்தை நெரித்துக்கொள்பவனின்
நிலத்திமிர் வரைபடத்தில் கறுத்துக்கிடத்தல்
நூற்றாண்டு நியதி
அவன்தன் கழுத்தை நெரித்துக்கொள்ளத்தொடங்கல்

அடிமை தேசமெனத் திசையெழுதி கர்ஜிக்கும்
உன் தடித்ததொனியின்கீழ் கசங்கிச்செத்திற்று நிகழ்காலம்

நிறத்தை நிறம் வெல்லும் ஆக்கிரமிப்பின் அக்னியில்
புதைகிறது
வெண்நிறத்தில் பெரு மனசு
அடிக்கீழறையில் பதுங்கிற்று முரட்டுக்கர்ஜனை

லிங்கனின் பெருங்கனவும் செத்திற்று

ஜோர்ஜ் ப்ளொயிட் அலறுகிறான் குரல்கள் பெருக்கிறது
'உங்கள் முழங்கால் எங்கள் கழுத்திலிருந்து அப்புறப்பட
வேண்டிய காலம் வந்துவிட்டது'

எல்லாத்திசையும் ஆமேன் என்றது

(அமெரிக்காவில் பொலிஸ் அதிகாரத்தின் கீழ் உயிர் பறிக்கப்பட்ட கறுப்பினத்தவனின் நினைவாக எழுதப்பட்டது)

2020 ஜூலை 20

## லீலாவதி அல்லது லீலாரத்ன

மகா இருளின் ஒளிப்பொட்டில்
விகசிக்கிறது அவள் திருமுகம்

ஒடுக்க வீதியில் குறுகிப்பேய்
காடுகள் கடந்து
கூரையுமற்ற ஒற்றைக்குடிலில் அவள் வாசம்
லீலாவதிக்கு காலம் கடிகாரம்

காய்ச்சலொன்றாலே
ஆஸ்பத்திரியும் காணா உடல்

ஓட்டுப்போடும் திருநாளில்
வெள்ளையுடுத்துப் புனித
தேவதையாய் வெளியே வருகிறவள்

ராசாவின் கட்டளையில்
பூரித்துப்போகிறாள்
ஐந்தைந்து வருஷப்பூரிப்பு

2020 ஓகஸ்ட் 02

## சோனியன் காலம்

சேற்றில் விழுந்து முகங்குப்புறக்கிடக்கும்
சோனியன் நான்

அப்பிய சேற்றில்
உறிஞ்சிக்குடித்து வயிறு பெருக்கும் கனவு

முகத்திலப்பியசேற்றை வழித்து
நெஞ்சில் தடவும் திமிர்

சேற்றில் முளைத்த ஊத்தைச்சொற்களை
ஊரில் விதைக்கும் ஞானியன் நான்

சேற்றிலமுங்கித்திமுறி
மூச்செடுக்கையில்
மூன்றாம் தலைப்பாம்பு சுற்றியென்னில்
விஷமுந்தடவும்

சேற்றுப்புழுவாய் நெளியும்
உம்மத்தின் உசிரைக்குடிக்கும்
மசிரும் புடுங்க முடியாப் பாக்கியசாலி

நான் முள்ளந்தண்டுமில்லாச்சோனியன்

தெரிந்து கொண்டே
சேறள்ளியென்னை முகங்குப்புற பூசிற்று
காலமெனும் பூதம்

2020 ஒக்டோபர் 22

## என் அறைச்சுவரெங்கும் படர்ந்த கொடி

பிஞ்சுவிரல்களில் இலையொன்றைச் செதுக்கினாய்
அதில் பச்சை வழிந்து
சொட்டிற்று என் நெஞ்சில்
பூஞ்சிரிப்பின் வதனப் பூவில் தேன் பொங்க
அள்ளிப் பருகினேன் சில கணங்கள்
நீ வரைந்த இலையொன்று
குருத்தாகி துளிர்ந்து வேர்வழிச்சென்று
சிறு செடியானது
என் அறைச் சுவரெங்கும்
நான் கணங்களைத் தொலைக்கும் கடும் பொழுதுகளில்
ஆயிரம் இலைகள் கொண்ட
பசும்மரங்கள் பூத்து
என் அறைகளை வர்ணமிடுகின்றன
நிறம் வழியும்
இலையும் பூவுமான ஓவியங்களில்
இப்போது நான் நிறைகிறேன்
நீ
சிரிப்புதிர்க்கிறாய்

காய்ந்து கருகின இலைகளைக்
காற்று அள்ளிச் செல்கிறது
புத்திலைகள் அறைச்சுவரெங்கும் ஆவல் பூத்தன

2020 நவம்பர் 01

## என் முதுகில் அவன் முயல்குட்டி

அறை முழுவதும் ஓவியங்களால் நிறைகிறது
அவனது பிஞ்சு விரலின் ரேகைகள்
சுவர்களில் இயங்கத் தொடங்கின

அவனது கற்பனை அவனுக்கான வானத்தை வரைகிறது
இரு இறக்கைகளை அகல விரிக்கிறது

அவனது பறப்பு வியூகம் அலாதியானது

வர்ணங்களைக்குழைத்து அப்புகிறான் விரல்களின் வழியே
சுவரில் வழிகிறது அவனது ஆவல் பூத்த கனா

வண்ணத்துப்பூச்சியாய் சுவரெங்கும் மொய்க்கிறது

மெல்லிய ஊதா நிறக்குருவியொன்று
வானவில்லிலிருந்து வந்தமர்கிறது
பச்சை வண்ணக்கிளியிரண்டும்
ஓவியத்திலிருந்து வெளியாகி கூட்டுக்குள் நுழைந்தன

காலைக்காட்சியை வரைகையில்
முதலில் காகக்கூட்டங்களைக் கீறுகிறான்
காகங்கள்தான் புதுக்காலையை வரைந்து கொடுத்தன

சூர்யனைக்காணா அவஸ்தையில்
கிழக்காக சிவப்பாக கிறுக்குகிறான்
ஒளி பரவும் புலரி

விரல்களைக் குவித்தும் நெரித்தும்
வர்ணக்கலவையை விசுறுகிறான்
அழகழகான பூக்கள் நூறு
அவனது வதனத்தில் மலர்ந்தது
சாளரத்தில் வழியே உள்நுழைந்து
காற்றின் சுகந்தம் நாசியைத்தொட்டது

பின்
செடியை கொடியை கிளையை வரைகிறான்
வேரை நெஞ்சுக்குள் புதைக்கிறான்

ஆயிரம் மரங்கொண்ட வனத்திடை நுழைகிறான்

பிடித்தமான உந்துருளி ஈருருளி
வெள்ளை நிறத்தில் கார்
முன்னதான ஆகாயத்தில் விமானம்
பின்
கடதாசி ரொக்கெட் எலக்ரோனிக்கின் விசை

அதன் பின்பு
பெயரில்லா இன்னமொன்று பலபலவாய்
அவன் வரைபு முடிவிலி வரைபு
அறை முழுவதும் ஓவியங்களால் வளர்கிறான்

வனத்தினிடை முயல்

இப்போது முயல்குட்டி
என் முதுகில்
அவன்

2020 நவம்பர் 11

## ஒரு கோடிச் சொற்களின் சிறகு

ஒரு கோடிச் சொற்களின் சிறகுகள்
எனது கூட்டிலிருந்து
குரலையள்ளிப் பறக்கிறது
குருவியின் சிறகில் உந்தித்தெறிக்கின்ற
ஒரு கோடிச் சொற்களும்
பலகோடி நிறக்கனாக்களுமாக
காற்றெழுதிய மென்மொழியில்
மெழுகப்பட்ட பாடலொன்றை இசைக்கிறது
என் குருவி மனசு

2020 டிசம்பர் 21



தண்ணீருத்துறையும் நீராவிப் பிட்டியையும்
கதிர்மீறா குளத்தையும் விட்டுப்பிடுங்கி
எறியப்பட்ட 'காலத்துயர்'
முஸ்ரிபாவின் எழுத்து முழுதும்
இழையோடும்.
நெஞ்சைப்பிழியும் பிறந்த மண்
எல்லோருக்கும் நற்றவ வானினும்
நனி சிறந்ததுதான்
ஆனால் முஸ்ரிபா தன் தாய் மண்ணை
நேசிக்கும் அளவுக்கு வேறுயாரும்
நேசிப்பரோ அறியேன்.
ஆகதியாகி முகாமில்
முடங்கிக் கிடக்கும் அவலத்தை
அனுபவித்தவனால்தான் சொல்ல முடியும்.

அந்த அனுபவம்
உலகப் பொது அனுபவமாகி
மறைபடமற்றவர்களின் காலடியில்
துளிர்த்துக் கொண்டிருக்கிறது.
'முகாமில் என்பேரன் சிறு துரும்பெடுத்து
புதிதாய் சூரியனை வரைதல் கூடும்

என்ற கனவும். கனவு மெய்ப்பட

'ஆதிவேரோடிய நெஞ்சில்
மீளத் துளிர்க்கிறது
நினைவொட்டிய பிஞ்சுமண் குருத்து
வாப்பாவின் வாப்பாவின்
வயல் வெளியும் பூரிக்க
நீராவிப் பனிநீரில் நீராடி களிகொண்ட
இளங்காலைப் பொழுதும்
பொன்னி வண்டுச் சிலிர்ப்புமான
ஆதிவேரோடிய நெஞ்சில்
மீளவும் துளிர்க்கிறது.
நினைவொட்டிய பிஞ்சு மண் குருத்து'

இடப்பெயர்வு இலக்கியத்தின்
தோரண வாயிலை
அலங்கரிக்கிறது முல்லை முஸ்ரிபாவின்
கவிதை

– சோ.ப.

முல்லை முஸ்ரிபா

மறைபடமற்றவர்களின் காலடி

Cover Design: S.Naleem #+94773254959

9 786249 596214